# பரிசுத்த ஆவியானவரின் வரங்கள்

## அஸ்திபார சத்தியம் தொகுப்பு 8

## பீட்டர் டான்

© பதிப்பு உரிமை 2008 பீட்டர் டான் சுவிசேஷம். எல்லா உரிமைகளும் முன்பதிவு செய்யப்பட்டவை. பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இப்புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பிறமொழியாக்கம் செய்யவோ, துண்டு பிரசுரம் செய்யவோ, நகல் எடுக்கவோ, அச்சிடவோ, வேறு எவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

இந்தப் புத்தகத்தின் pdf நகல் ஒன்றின் விலை A$10. விலை கொடுத்த இப்புத்தகத்தை வாங்க முடியாதவர்கள், ஆசீர்வதிக்கப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இதை இலவசமாக கொடுக்கிறோம். எங்களது ஊழியம் தொடர்ந்து நடைபெற, உங்களால் முடிந்த பொருளாதார உதவியை நன்கொடையாக அனுப்புங்கள்.

உங்களது நன்கொடைகளை paypal வழியாக elshaddai1@bigpond.comக்கு அனுப்புங்கள்.
வேறு எந்த வழியிலும் உங்களது நன்கொடைகளை அனுப்ப தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:


Peter Tan Evangelism
PO Box 27
Belconnen
ACT 2616, Australia.

Tel.: 00614 17755613
Email: elshaddai1@bigpond.com


*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# முகவுரை

இந்த புத்தகத்தில், பரிசுத்த ஆவியானவருடைய வரங்களை செயல்படுத்துவதில் உள்ள நடைமுறை அம்சங்களை குறிப்பாய் கவனிக்க நாடுகிறோம். ஒவ்வொரு வரங்களின் வரையறைகளும் விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், ஒவ்வொன்றும் 'எவ்வாறு' செயல்படுகிறது என்பதையும் விவரிக்கிறோம். வரங்களில் செயல்படும் முன்பு, கிறிஸ்தவர்கள் எந்த வகையான வரங்களை பெற்றுக்கொள்கிறார்கள் என்று அறிந்து கொள்வது அவசியமாகிறது.

போதனை குறைவினிமித்தமாக சில இடங்களில், பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் அதிகமாக வெளிப்படுவதில்லை. போதனைதான் விசுவாசத்தையும், வரங்கள் செயல்படு வதின் விளங்கிக்கொள்ளுதலையும் கொண்டுவருகிறது. இந்த நோக்கத்தை மனதில் கொண்டுதான் இந்தப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

உங்கள் வாழ்விலுள்ள தேவ அழைப்பை விளங்கிக்கொள்ளுங்கள். உங்கள் மேலுள்ள தேவ கிருபையை வாரி வழங்குங்கள். உங்களது வாழ்வில், அவரது வரங்களின் செயல்பாட்டில் உள்ள எல்லைகளையும் வரம்புகளையும் அறிந்துகொள்ளுங்கள். உங்கள்மேல் அவரது மகத்தான அபிஷேகம் இருக்கும்படி அவர் அனுக்கிரகிப்பாராக.

பாஸ்டர் ***பீட்டர் டான்***

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

## *அத்தியாயம் 1*

# வரங்களின் செயல்பாடுகள்

கிறிஸ்தவ வாழ்விலுள்ள மற்ற எல்லாக் காரியங்களையும் போலவே, பரிசுத்த ஆவியானவரின் வரங்களும் போதிக்கப்பட்டு செயல்படுத்தப்படவேண்டும். பரிசுத்த ஆவியானவரின் வரங்களைப் பற்றி அவர்கள் அறியாமையுள்ளவராயிருக்க விரும்ப வில்லையென்று பவுல் கொரிந்தியருக்கு சொன்னார் (1 கொரி. 12:1). வரங்களின் ஒழுங்கும் கிரமமுமான செயல்பாட்டின் போதனையில், பவுல் இரண்டு குழுக்கலாக மக்களை குறிப்பிடுகிறார்: அவிசுவாசிகள் மற்றும் கற்றுக்கொள்ளாதவர்கள் அல்லது போதிக்கப் படாதவர்கள் (1 கொரி. 14:23, 24). கற்றுக்கொள்ளாதவர்கள் என்பவர்கள் வரங்களின் செயல்பாட்டை பற்றியும், அவைகள் உறுதியாக தொடர்ந்து பாய்ந்து செல்வதைப் பற்றியும் போதிக்கப்படாத விசுவாசிகள்.

இந்தப் பிரிவில் கொஞ்சம் கிறிஸ்தவர்கள்தான் இருக்க வேண்டுமென ஜெபிக்கிறோம். பரிசுத்து ஆவியானவரின் எல்லா வரங்களும் செயல்படுவதை விளங்கிக் கொண்டு அறிந்தவர்களாய் எல்லா கிறிஸ்தவர்களும் இருப்பார்களாக.

### *பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படுதல்*

பரிசுத்த ஆவியானவரின் ஒன்பது வரங்களையும் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம்:

| | | |
|---|---|---|
| வெளிப்பாட்டு வரங்கள் | – | ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், ஆவிகளைப் பகுத்தறிதல். |
| வல்லமை வரங்கள் | – | விசுவாச வரம், அற்புதங்களை நடப்பித்தல், சுகமாக்கும் வரங்கள். |
| வாக்கு வரங்கள் | – | தீர்க்கதரிசன வரங்கள், பற்பல பாஷைகள், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல். |

பரிசுத்த ஆவியானவரின் வரங்கள், அவர் பயன்படுத்த தெரிந்துகொள்ளும் பாத்திரங் களின் விருப்பத்திற்காக அருளப்படவில்லை. பரிசுத்த ஆவியானவர் தனது விருப்பம்போல வெளிப்படுத்துகிறார் (1 கொரி. 12:7, 11). வெளிப்படுத்தவோ வெளிப்படுத்தாமல் இருக்கவோ தெரிந்துகொள்ளும் உரிமையை, அவர் தனக்காக பிரத்தியேகப்படுத்தி உள்ளார். அவர்தான் இன்னும் தலைவராயிருக்கிறார். வரங்களை கொடுத்தவரிலிருந்து அவைகளை நம்மால் பிரிக்கவே முடியாது. வரங்களில் நாம் செயல்பட விரும்பினால், பரிசுத்த ஆவியானவராகிய நபரில் நாம் நெருங்கி சம்பந்தப்பட வேண்டும்.

பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படுதல், நமது சுய தெரிந்தெடுப்பையோ, நமது அறிவையோ, நமது உணர்ச்சிகளையோ அல்லது நமது சரீரத்தையோ தவிர்த்து வருவ தில்லை. அசுத்த ஆவிகள் ஒரு நபரின் சித்தம், மனது, உணர்ச்சிகள் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்தி சரீரத்தை பற்றிக்கொள்ளும். பரிசுத்த ஆவியானவர் முழுமையும் மென்மையானவர். நாம் அவரை தெரிந்துகொள்ள அவர் காத்திருக்கிறார்; அது, நமது சித்தத்தை அவருக்கு விட்டுக்கொடுப்பதாகும்.

நமது வாழ்வின் மிகமுக்கியமான பகுதி என்னவெனில், சுய தெரிந்தெடுக்கும் வல்லமையே. தேவனாலும், தேவதூதர்களாலும் இது மிகவும் உயர்வாக மதிக்கப்படுகிறது. தடையின்றி தெரிந்தெடுக்கும் நமது பகுதியை அத்துமீற, அசுத்த ஆவிகளும் அனுமதிக்கப் படுவதில்லை. ஆவி மண்டலத்தின் யுத்தகளம் என்பது மனித சித்தமே. சோதனைகள் மூலமாக தீமையானவைகளை நாம் தெரிந்தெடுக்க அசுத்த ஆவிகள் நாடுகின்றன.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

பரிசுத்த ஆவியானவரை நாம் தெரிந்தெடுக்கும் வரையில், பரிசுத்த ஆவியானவர் வெளிப்படவேமாட்டார். நமது சித்தத்தை பரிசுத்த ஆவியானவருக்கு விட்டுக்கொடுக்க நாம் கற்றுக்கொள்ளும்பொழுது, அவர் அதிகமதிகமாக வெளிப்படுகிறார். பரிசுத்த ஆவியானவர் விடுதலையோடு இயேசுவை உந்தித்தள்ளும் அளவுக்கு, ஆண்டவராகிய இயேசு பரிசுத்த ஆவியானவருக்கு அந்த அளவு தன்னை விட்டுக்கொடுத்திருந்தார் (மாற். 1:12). பரிசுத்த ஆவியானவரில் கட்டுண்டவராய் எருசலேமுக்குப் போகக்கூடிய அளவுக்கு, பவுல் பரிசுத்த ஆவியானவருக்கு விட்டுக்கொடுத்திருந்தார் (அப். 20:22, 23). பரிசுத்த ஆவியானவருக்கு விட்டுக்கொடுப்பதில் பல நிலைகள் உள்ளன. நாம் எந்த அளவுக்கு விட்டுக்கொடுக்கிறோமோ அந்த விகிதத்தில் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுகிறார்.

பரிசுத்த ஆவியானவருக்கு நமது சுய சித்தங்களை விட்டுக்கொடுத்த பிறகு, தேவ வார்த்தையால் அவர் நமது சிந்தைகளை புதுப்பிக்க நாடுகிறார். வெளிப்பாட்டையும், ஆவி மண்டலத்தின் காரியங்களை விளங்கிக்கொள்வதையும், அவர் மென்மையாக பகிர்ந்தளிக்கிறார். அவரது வெளிப்படுத்தல்களை நாம் விளங்கிக்கொள்ளாமல் இருக்கும் பொழுது, அவரது வரங்களுக்கு நாம் வாய்க்காலாக இருக்க இயலாது. நமது சிந்தனைகள் அதிகமாக ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் வரும்பொழுது, அவரது வெளிப்படுத்தல் களின் பருமனும் அடர்த்தியும் அடிக்கடி நடைபெறும். ஆவியானவரின் காரியங்களில் நாம் கவனம் செலுத்த பழகிக்கொள்ள வேண்டும் (ரோம. 8:5).

அவரது வெளிப்படுதலின் மூன்றாம் நிலை என்பது, நமது உணர்ச்சிகள் மூலமே. மற்றவர் களோடு தொடர்புகொள்வதில் நமது உணர்ச்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நமது எல்லா அனுதின செயல்களிலும், ஒரு குறிப்பிட்ட அளவு உணர்ச்சிகள் ஈடுபடு கின்றன. சிலர் மற்றவர்களைக் காட்டிலும் குறைவாகவே உணர்ச்சிகளை காட்டுகின்றனர். எனினும் அவர்கள் தங்கள் அனுதின வாழ்வை உணர்ச்சிகளால் நடத்துகின்றனர். உணர்ச்சிகள் என்று சொல்லும்பொழுது, வெடித்துக்கிளம்பும் கோபத்தை அல்லது வேகமாய் பாயும் கண்ணீரை மட்டும் நாம் சொல்லவில்லை.

உணர்ச்சிகள் என்பது வாழ்வு எதைப்பற்றியது என்பதாகும். அவைகள்தான் ஆத்து மாவின் சுவை மொட்டுகள் (அ) அரும்புகள் ஆகும். அதுதான் ஆத்துமாவின் உணர்ச்சி ஆகும். அது நல் வாழ்வின் அனுபவத்தையும், வாழ்வின் உற்சாக பெலனையும், சாதிக்கும் ஆர்வத்தையும், வாழ்வை அனுபவிப்பதையும், நமக்கு கொடுக்கிறது. இவைகள் முற்போக் கான உணர்ச்சிகள். பிற்போக்கான உணர்ச்சிகள் இவைகளுக்கு மாறுபட்டவைகளே.

சில நேரங்களில் சிலரது வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் ஒரு நபரது அறிவில் வேலையை ஆரம்பிப்பதற்கு முன்பு, அந்த நபரது உணர்ச்சியில் ஆரம்பிக்கிறார். மற்ற நேரங்களில் அவர் ஒரே நேரத்தில் இரண்டிலும் வேலை செய்கிறார். ஆத்துமாவில் முதற் பகுதியாக அவருக்கு எப்பொழுதுமே தேவைப்படுவதெல்லாம், மனித சித்தத்தின் சுய இஷ்டமான அர்ப்பணிப்பேயாகும். பரிசுத்த ஆவியானவர் நமது ஆவியிலும், நமது ஆத்துமா விலும் பிறகு நமது சரீரத்திலும் வெளிப்படுத்துகிறார்.

நமது ஆவியும் ஆத்துமாவும் பரிசுத்த அவியானவர் கட்டுப்பாட்டுக்குள் வரும்பொழுது, நமது சரீரத்தின் மூலமாக அவர் வல்லமையான வழிகளில் வெளிப்படுத்துகிறார். சில கிறிஸ்தவர்கள் தங்கள் கைகளில் இயற்கைக்கப்பாற்பட்ட தானாக எண்ணெய் பாய்வதை பெற்றிருக்கின்றனர். மற்றவர்கள் தங்களது தலையை சுற்றிலும் விசேஷித்த பிரகாச ஒளிவட்டம் பெற்றிருக்கின்றனர். பரிசுத்த ஆவியானவரின் வல்லமை பரப்பிகளாக மனித சரீரங்களின் நிழல்கள் கூட மாறமுடியும் (அப். 5:15).

*ஊழியங்களுக்கு வரங்களை சம்பந்தப்படுத்துதல்*

முதலாம் கொரிந்தியரில் மூன்று பிரிவுகளான வேறுபட்டவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன: பரிசுத்த ஆவியானவர் மூலமாக பற்பல வரங்கள், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பற்பல ஊழியங்கள், நமது பிதா தேவனின் பற்பல செயல்பாடுகள் (1 கொரி. 12:4–6). பற்பல

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

வரங்கள் என்பவைகள் பரிசுத்த ஆவியானவரின் ஒன்பது வரங்களை குறிக்கும் (1 கொரி. 12:8–10). பற்பல ஊழியங்கள் ஐந்து வகை ஊழியங்களையும், விசுவாசிகளின் ஒன்பது ஊழியங்களையும் குறிக்கும் (எபே. 4:11; ரோம. 12:6–8; 1 கொரி. 12:28).

பரிசுத்த ஆவியானவரின் வரங்கள், ஊழிய வரங்களோடு சம்பந்தப்பட்டவை. இவைகள் தாலந்துகளுக்கும் சேவிக்கும் நிலைக்கும் உள்ள உறவின் மூலம், உதாரணமாக விவரிக்க முடியும். உதாரணமாக ஒரு நபர் செயலாலராக செயல்படும்பொழுது, அந்த நபர் அந்த சேவை நிலையில் செயல்பட மூன்று தாலந்துகளை பெற்றிருக்கலாம். அவசியமான அந்த மூன்று தாலந்துகள், ஆங்கில சொல்வளம், சுருக்கெழுத்து அறிவு மற்றும் தட்டச்சில் அடிக்கும் திறன் ஆகியவையாகும். அந்த சேவைநிலையில் செயல்பட ஒரு நபருக்கு மூன்று தாலந்துகள் தேவைப்படும்.

ஒரு நபரை தேவன் தீர்க்கதரிசியாக செயல்பட அழைக்கும்பொழுது, அந்த நபர் இரண்டு வெளிப்பாட்டு வரங்களிலும், ஒரு வாக்கு வரத்திலும் செயல்பட தேவன் எதிர்பார்க்கிறார். ஒரு ஆவிக்குரிய சேவைநிலையில் செயல்பட அவருக்கு மூன்று வரங்கள் செயல்பட வேண்டும். ஒரு அப்போஸ்தலனுக்கு வெளிப்பாட்டு வரங்களுக்கும் வல்லமை வரங்களுக்கும் ஒருங்கிணைந்து செயல்பட அவசியமாகிறது.

ஒரு நபர் தட்டச்சு அடிக்கும் தாலந்தை பெற்றிருந்தால்மட்டும் அவர் செயலாளராக முடியாது. அதுபோலவே, ஒரு நபர் தீர்க்கதரிசன வரத்தில் செயல்படுவது, அவரை தீர்க்க தரிசியாக்காது. அந்த சேவைநிலை அதன் வரங்களை அவசியமாக்கினாலும், வரங்கள் அந்த சேவைநிலைக்கு உத்திரவாதம் கொடுப்பதில்லை. மனிதர்களல்ல, தேவனே ஆவிக் குரிய சேவைநிலைக்கு ஆட்களை நிலைநிறுத்தகிறார்.

*சரியான சூழ்நிலை*

பரிசுத்த ஆவியானவர் தன்னை வெளிப்படுத்தும் முன்பு, தேவையான குறைந்த அளவு ஜெபநிலையும், விசுவாச நிலையும், ஆராதனை நிலையும் அவசியமாகிறது. மின்சார விளக்கு எரிவதற்கு சரியான மெல்லிய இழையும், சரியான அளவு மின்சாரமும், சரியான மின் இணைப்பும் நமக்கு தேவையாயுள்ளன. இவையெல்லாம் சரியான இடத்தில் இருக்கும்பொழுது, விளக்கு எரிகிறது.

கதரேனருடைய நாடாகிய கெனேசரேத்திற்கு இயேசு முதலாவது சென்றபோது, பிசாசு பிடித்தவன் விடுதலையான பின்பு, ஜனங்கள் இயேசுவை புறக்கணித்து அவரை அவ்விடம் விட்டுப்போகும்படி அவரிடம் சொன்னார்கள் (மாற். 5:17). விடுதலையான மனிதன் இயேசுவை பின்பற்றி செல்ல விரும்பினான், ஆனால், அவரோ அவனது சாட்சியை அந்த திசையெங்கும் பகிர்ந்துகொள்ளும்படி கூறினார் (மாற். 5: 19, 20). அந்த பகுதிக்கு இயேசு திரும்பி வந்தபோது, பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையும் வரங்களும் சுலபமாக வெளிப்படும்படி, ஜனங்களின் விசுவாச நிலையும் எதிர்பார்ப்பும் அதிகரித்திருந்தது. அவரது வஸ்திரத்தை எத்தனைபேர் தொட்டார்களோ அத்தனை பேரும் சுகமானார்கள (மாற். 6:53–56).

சாலமோனின் நாட்களில் ஆசாரியர்களுடைய ஆராதனை உயர்வான ஒரு நிலைக்கு வந்தபோது, தேவமகிமையின் வெளிப்படுதல் காணப்பட்டது (2 நாளா. 5:13). பிலிப்பி பட்டணத்தில் பவுலும் சீலாவும் சென்றபோது, அவர்கள் அடிக்கப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு, கால்கள் தொழுமரத்தில் மாட்டப்பட்டன. நடுராத்திரியிலே அவர்கள் ஜெபம் பண்ணி தேவனை துதித்துப் பாடினபோது, தேவ வல்லமை சிறைச்சாலையினுள் வந்தது. முழு சிறைச்சாலையையும் அது அசைத்து அவர்களை விடுதலையாக்கிற்று (அப். 16:25, 26).

பரிசுத்த ஆவியானவரது வெளிப்படுத்துதலை கொண்டுவரக்கூடிய அளவுக்கு, ஜெப நிலையும் ஆராதனை நிலையும் விசுவாச நிலையும் மிகவும் உயர்ந்திருந்தது.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

*பரிசுத்த ஆவியானவரை அவித்துப்போடுதலும் துக்கப்படுத்துதலும்*

நாம் செய்யும்படி பரிசுத்த ஆவியானவர் விரும்பாத காரியங்களை நாம் செய்யும்பொழுது, பரிசுத்த ஆவியானவரை நாம் துக்கப்படுத்துகிறோம். (எபே. 4:30). பரிசுத்த ஆவியானவர் மிகவும் உணர்வுள்ள ஒரு நபராவார். அவர் நம்மை செய்யச் சொல்லாதவற்றை நாம் செய்யும்பொழுது, அவர் வருத்த மடைந்து துக்கப்படுகிறார். அது தவறான சிந்தனையாயிருக்கலாம், தவறான வார்த்தையா யிருக்கலாம், அல்லது தவறான செயலாயிருக்கலாம். அவைகள் எல்லாம் அவரை துக்கப் படுத்துகின்றன. பாவத்தில் விழுந்த பிறகு, தாவீது பரிசுத்த ஆவியானவரை தன்னிடமிருந்து எடுத்துக்கொள்ளாதபடி தேவனிடம் கதறினார் (சங். 51:11). பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத் தினதை தாவீது அறிந்திருந்தான்.

நாம் செய்யும்படி பரிசுத்த ஆவியானவர் நமக்கு கட்டளையிடுகிறவைகளை நாம் அலட்சியம் செய்யும்பொழுது, நாம் பரிசுத்த ஆவியானவரை அவித்துப்போடுகிறோம். பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்வில் அக்கினியாக தூண்டப்படுகிறார். அவிசுவாசம் சந்தேகமாகிய தண்ணீரினால் நாம் அதை அவித்துப்போடுகிறோம். பரிசுத்த ஆவியானவர் தன்னை எப்பொழுதெல்லாம் வெளிப்படுத்த விரும்புகிறாரோ, அப்பொழுதெல்லாம் நமது ஆவி மனிதனில் ஒரு கிளர்ச்சியை அல்லது எழுச்சியை உண்டாக்குகிறார். நமது ஆவியில் ஏற்படும் அவரது எழுச்சிக்கு, நாம் உணர்வுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அவரது எழுச்சியை நாம் உணர்ந்தும் நாம் செயல்படாமலிருக்கும்போது, அவர் வெளிப்படுத்த விரும்பும் வரங்களை நாம் அவித்துப்போடுகிறோம்.

தனது ஆவியோடும் தேவனை சேவித்ததாக பவுல் சொன்னார் (ரோம. 1:9). பரிசுத்த ஆவியானவரின் எல்லா கிரியைகளும், மனித ஆவியின் மூலமே எப்பொழுதும் தடையின்றி பாய்ந்து வரும். நாம் மறுபடியும் பிறந்த அந்த நொடியிலிருந்து பரிசுத்த ஆவியானவர் நமது ஆவிகளில் வாசம்பண்ணுகிறார் (எசே.. 36:26, 27). அவர் செய்யும் ஒவ்வொன்றும் நமது ஆவிகள் மூலமாகவும், பிறகு நமது ஆத்துமாவின் மூலமாகவும் பிறகு நமது சரீரத்தின் மூலமாகவும் செய்கிறார். தீர்க்கதரிசிகளின் ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கினதே என்று பவுல் சொன்னார் (1 கொரி. 14:32).

வரங்களின் எல்லா வெளிப்படுதல்களும், நமது ஆவிகளின் உணர்வுள்ள தன்மையையும், நமது சுயசித்தத்தின் அனுமதியையும் பொறுத்தே அமையும். பரிசுத்த ஆவியானவருக்கு முழுவதும் விட்டுக்கொடுக்க கற்றுக்கொள்ளுங்கள்.

*ஒத்திருக்கும் வளர்ச்சி குணாதிசயங்கள்*

பரிசுத்த ஆவியானவரின் ஆவிக்குரிய வரங்கள் ஒவ்வொன்றும், ஆவிமனிதன் குணா திசயத்திற்கு ஒத்திருக்கின்றன. அவைகள் சாராம்சத்திலும் குணத்திலும் ஒத்திருந்தாலும், செயல்பாட்டில் வித்தியாசப்படுகின்றன. உண்மையான அர்த்தத்தில், அவைகள் வரங்களின் குணாதிசயங்கள் என்பதைவிட வளர்ச்சியின் குணாதிசயங்கள் எனலாம். இங்கு நாம் அவைகளை பட்டியலிடுவோம். ஆனால் வருகிற அத்தியாயங்களில் இன்னும் அதிகமாக விளக்குவோம்.

| வரங்கள் | வளர்ச்சிகள் |
|---|---|
| 1. ஞானத்தை போதிக்கும் வசனம் | 1. ஆவிக்குரிய ஞானம் |
| 2. அறிவை உணர்த்தும் வசனம் | 2. ஆவிக்குரிய அறிவு |
| 3. ஆவிகளை பகுத்தறிதல் | 3. பகுத்தறிதல் |
| 4. விசுவாச வரம் | 4. விசுவாசத்தில் வளருதல் |
| 5. அற்புதங்களை செய்தல் | 5. அற்புதங்களுக்காக விசுவாசித்தல் |
| 6. சுகமாக்கும் வரங்கள் | 6. சுகத்திற்காக விசுவாசித்தல் |
| 7. தீர்க்கதரிசன வரம் | 7. புத்தி சொல்லுதல் |

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

| | |
|---|---|
| **8.** அந்நிய பாஷைகளின் வரம் | **8.** அந்நிய பாஷைகளில் ஜெபித்தல் |
| **9.** பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் | **9.** தனிப்பட்ட வியாக்கியானம் |

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## *அத்தியாயம் 2*

# வெளிப்பாட்டு வரங்கள்

வெளிப்பாட்டு வரங்கள் அப்படி அழைக்கப்படுவதின் காரணமே, அவைகள் வெளிப் படுத்துவதாலேயே. வெளிப்பாட்டு வரங்களிலெல்லாம் மிக முக்கியமானது ஞானத்தை போதிக்கும் வசனமாகிய வரமே. எல்லா மூன்று வெளிப்பாட்டு வரங்களும் ஒன்று சேர்ந்தும் வெளிப்படுத்தப்படலாம். ஒன்றுக்கொன்று அவைகள் பாய்ந்து செல்லும். ஆனால், அவைகளை பிரிப்பதின் நோக்கமே, ஒவ்வொரு வரத்தின் விசித்திர தன்மையை விளங்கிக் கொள்வதற்காகத்தான்.

*ஞானத்தை போதிக்கும் வசனம்*

எதிர்காலத்தைப் பற்றிய காரியங்களுக்காக தேவ சிந்தையின் வெளிப்பாடே ஞானத்தைப் போதிக்கும் வசனமாகும். ஒரு வார்த்தை ஒரு வாக்கியத்தின் பகுதியாகும். ஞானத்தை போதிக்கும் வசனமென்பது, எதிர்காலத்தைப் பற்றிய தேவனது ஒட்டுமொத்த அறிவின் ஒரு பகுதியாகும். தேவன் தனது பாத்திரங்களுக்கு ஒவ்வொன்றையும் வெளிப்படுத்துவதில்லை. ஊழிய நோக்கங்களுக்காக என்னென்ன தேவைப்படுகிறதோ, அவைகளை மட்டும் அவர் வெளிப்படுத்தகிறார். எல்லா நேரத்திலும் ஒவ்வொன்றும் எலிசாவிற்கு தெரியாதென்று கேயாசி அறிந்தான். நாகமானிடம் அவன் பொய் சொன்னபொழுது, பரிசுத்த ஆவியான வரின் வரங்களில் எலிசா செயல்படாத நேரங்களில் ஒன்றாகவே அவன் அதை நம்பினான் (2 இராஜா. 5:20–27). சூனேமியாளின் மகனுக்கு என்ன நடந்தது என்பதை தேவன் தனக்கு வெளிப்படுத்தவில்லையென எலிசா ஒத்தக்கொண்டான் (2 இராஜா. 4:27).

தீர்க்கதரிசியாகிய அகபு ஞானத்தை போதிக்கும் வசனத்தை செயல்படுத்தியபோது, அங்கு ஒரு பஞ்சம் உண்டாகும் என்று அவன் வெளிப்படுத்தினான் (அப். 11:28). அவர் ஞானத்தை போதிக்கும் வசனத்தில் செயல்பட்டபொழுது, அங்கு 'அவர்மேல் ஒரு அபிஷேகமிருந்தது'. பஞ்சம் உண்டாகுமென்று தனது மனித ஆவியினாலல்ல, பரிசுத்த ஆவியானவரால் அகபு தீர்க்கதரிசனம் சொன்னார். மனித ஆவியின் சத்தத்தை மட்டுமல்லாமல், பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தையும் அவர் கேட்டார். பவுல் சிறையில் அடைக்கப்படுவதைப் பற்றி தீர்க்கதரிசனம் சொன்னபோது, 'இவ்வாறு பரிசுத்த ஆவியானவர் சொல்கிறார்' என்ற சொற்றொடரை அகபு பயன்படுத்தினார் (அப். 21:11). ஞானத்தை போதிக்கும் வசனமென்பது, பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை கேட்பதின் மூலமாக பகிர்ந்தளிக்கப்பட்ட வெளிப்பாடே ஆகும்.

எதிர்காலத்தைப் பற்றிய காரியங்களை மனித ஆவியின் சத்தம் நம்மோடு பேசுவது, ஞானத்தைப் போதிக்கும் வசனத்தில் செயல்படுவதாகாது. ஆனால் இது ஒரு ஆவிக்குரிய ஞானத்தின் செயல்பாடுதான். மேலிருக்கும் அபிஷேகத்தைவிட இது உள்ளிருக்கும் அபிஷேகத்தின் செயல்பாடாகும். தான் பயணப்பட நினைத்த கப்பல், பயணத்தை ஆரம்பிக்கு மானால், மிகுந்த சேதம் வரும் என்று பவுல் தனது மனித ஆவியில் ஒரு வெளிப்பாட்டை பெற்றுக்கொண்டார் (அப். 27:10). 'கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்' என்று பவுல் பயன்படுத்தாமல், தன் மனதில் பெற்றுக்கொள்வதாக அவர் சொன்னார். 'கர்த்தர் சொல்லுகிற தென்னவென்றால்' என்பதை நாம் கவலையீனமாக பயன்படுத்தக் கூடாது.

பரிசுத்த ஆவியானவருடைய சத்தத்தின் மூலமாக பெற்றுக்கொண்ட வெளிப்பாடுகளுக்கும், மனித ஆவிகள் மூலமாக பெற்றுக்கொண்ட வெளிப்பாடுகளுக்கும் உள்ள வித்தியாசத்தை தனது நிருபங்களில் பவுல் விளங்கியிருந்ததை நாம் காண்கிறோம். பரிசுத்த ஆவியானவரிடமிருந்து தான் செய்ய வேண்டிய தகவலை அவர் பெற்றுக்கொண்டபோது, ஆண்டவர்தான் இதைக் கட்டளையிட்டார் என்று சொன்னார் (1 கொரி. 7:10). தனது மனித ஆவியின் மூலமாக, தனது மனதில் தான் கண்ட, மற்றவர்கள் செய்ய வேண்டிய காரியமொன்றை அவர் சொல்லும்போது, தானே அந்த

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

அறிவுறையை கொடுப்பதாக சொன்னார் (1 கொரி. 7:12). பொதுவான அர்த்தத்தில், பரிசுத்த ஆவியானவரின் எல்லா செயல்களும், நமது மனித ஆவிகளின் வழியாகவே வருகின்றன (ரோம. 1:19). எனினும், பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் பரிசுத்த ஆவியானவர் நம்மூலமாக ஊழியஞ்செய்வதும், மனித ஆவியிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் வழிநடத்துதல் பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஊழியஞ்செய்வதுமாகும்.

### *ஆவிக்குரிய ஞானம்*

ஞானத்தைப் போதிக்கும் வசனமென்பது, உடனடியாக பகிர்ந்தளிக்கப்படும் வெளிப்பாடு ஆகும். ஆனால் ஆவிக்குரிய ஞானமென்பது, வளர்ச்சியின் விளைவாகும். தேவ வார்த்தையில் நாம் நேரம் செலவழிக்கும்போது, ஆவிக்குரிய ஞானத்தில் நாம் வளர்கிறோம். தேவ வசனம் நம்மை ஞானமுள்ளவர்களாகத்தக்க வல்லமையுள்ளது (2 தீமோ. 3:16). நாம் ஞானத்திற்காக ஜெபிக்கவும் முடியும் (யாக். 1:5). ஜெபத்தின் மூலமாகவும், கைகளை வைக்குதலின் மூலமாகவும், ஞானத்தின் ஆவியை பெற்றுக்கொள்ள முடியும் (எபே. 1:17; உபா. 34:9). மனித ஆவி ஆண்டவரில் முன்னேறி வளரும்போது, ஆவிக்குரிய ஞானம் பெருகுகிறது. ஆவிக்குரிய ஞானத்திற்கும், ஞானத்தை போதிக்கும் வசனத்திற்கும், தெளிவான வித்தியாசமுள்ளது.

யோசேப்பின் காலத்தில், எகிப்தின் பார்வோன் ஒரு சொப்பனம் கண்டான். வருகிற பஞ்சத்தைப்பற்றிய ஞானத்தைப் போதிக்கும் வசனம்தான் அந்த சொப்பனம். யோசேப்பைத் தவிர வேறு யாரும் அதற்கு வியாக்கியானம் சொல்ல இயலவில்லை (ஆதி. 41:1–28). யோசேப்பு அந்த சொப்பனத்திற்கு வியாக்கியானம் கொடுத்த பிறகு, பரிபூரண விளைச்சல் உள்ள வருஷங்களின் அதிகமான தானியத்தை பார்வோன் சேகரிக்கும்படி யோசேப்பு ஆலோசனை கொடுத்தான் (ஆதி. 41:35–37). பார்வோனுக்கு ஆலோசனை சொன்னபோது, ஆவிக்குரிய ஞானத்தை யோசேப்பு செயல்படுத்தினான். தேவ கட்டளைகளை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கும், இந்த வாழ்வின் எல்லா விவகாரங்களையும் கையாளுவதற்கும், ஆவிக்குரிய ஞானம் அவசியமாகிறது. நாம் முழுவதுமாக விளங்கிக்கொள்ள முடியாத, ஞானத்தை போதிக்கும் வசனத்தை நாம் சிலவேளைகளில் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் பேசினது இன்னது என்று அதிகமாக விளங்கிக்கொள்ளாமலேயே, பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசிகள் மேசியாவின் வருகையைக் குறித்துப் பேசினார்கள் (1 பேது. 1:10–12). பவுலுக்கு எருசலேமில் ஆபத்திருக்கிறதென்றும், அங்கு பவுல் போகாமலிருக்க வற்புறுத்தும் அளவிற்கு சீஷர்கள் உணர்ந்தார்கள் (அப். 21:4). அவர்கள் உணர்ந்தது சரியானதே, ஆனால் அதினால் அவர்கள் எடுத்த முடிவு தவறானது. எருசலேமுக்குப் போவது தேவ சித்தமாயிருந்தது (அப். 20:22). அவரை உற்சாகப்படுத்தவும், எருசலேமிலும் ரோமாபுரியிலுமிருந்து சாட்சிபகரவும், அவர் சிறைப்படுத்தப்பட்ட பிறகு, இயேசுவும் கூட அவருக்குத் தோன்றினார் (அப். 23:11).

பவுல் சிறையிலடைக்கப்படுவார் என்பது பற்றி அகபு தீர்க்கதரிசனம் சொன்ன பிறகு, பவுலோடு இருந்த சீஷர்கள் எருசலேமுக்கு போக வேண்டாம் என்று அவரை வற்புறுத்த முயற்சித்தார்கள் (அப். 21:12). ஞானத்தை போதிக்கும் வசனம் தேவனிடத்திலிருந்து வந்தது. ஆனால், அதன் வியாக்கியானம் தவறானது. பவுல் எருசலேமுக்குப் போவதை தேவன் தடுக்கவில்லை. எருசலேமில் என்னத்தை எதிர்பார்க்க வேண்டுமென்று அவர் பவுலுக்கு சொன்னார். பவுல் சிறையிலடைக்கப்படும்பொழுதும் அவர் தேவனின் பரிபூரண சித்தத்தில்தான் இருக்கிறார் என்று பவுலுக்கு உறுதிப்படுத்தவும், அவரை உற்சாகப் படுத்தவும் ஞானத்தை போதிக்கும் வசனம் கொடுக்கப்பட்டது. ஞானத்தைப் போதிக்கும் வசனத்தை அப்பியாசிக்க நமக்கு ஆவிக்குரிய ஞானம் தேவை.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

*அறிவை உணர்த்தும் வசனம்*

அறிவை உணர்த்தும் வசனம் என்பது, கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் பற்றிய தேவ சிந்தையின் வெளிப்பாடு ஆகும். இது தேவ அறிவின் உடனடியான பகிர்ந்தளிப்பு ஆகும். ஞானத்தைப் போதிக்கும் வசனத்திலுள்ளதைப்போலவே அறிவை உணர்த்தும் வசனமும், தேவ அறிவின் ஒரு சிறிய அளவேயன்றி தேவனது எல்லா அல்லது ஒட்டு மொத்தமான அறிவு அல்ல. நாம் அறிந்துகொள்ள தேவன் எதை அனுமதிக்கிறாரோ, அதை மட்டும்தான் நாம் அறிந்துகொள்ள முடியும்.

அனனியாவும் சப்பீராளும் என்ன செய்தார்கள் என்பது பற்றி, பேதுரு அறிவை உணர்த்தும் வசனத்தைப் பெற்றுக்கொண்டார் (அப். 5:1–11). அப்படிப்பட்ட அறிவைப் பெற்றுக்கொள்ள பேதுருவுக்கு இயற்கையான வழி ஏதும் இல்லை. பரிசுத்த ஆவியானவர் மூலமாக இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் அவர் அதை பெற்றுக்கொண்டார். சீரியா இராஜா தன் படுக்கை அறையில் கலந்துரையாடின ஒவ்வொன்றையும், அறிவை உணர்த்தும் வசனத்தால் எலிசா அறிந்துகொண்டார் (2 இராஜா. 6:8–12).

இயேசு தனது ஊழியத்தில் அறிவை உணர்த்தும் வசனத்தை மிகவும் அதிகமாக செயல் படுத்தினார். அவர் பேதுருவைப் பார்த்து அவரது பெயரைச் சொல்லி அழைத்து மட்டுமின்றி, அவருக்கு ஒரு புதிய பெயரையும் கொடுத்தார் (யோவா. 1:42). கிணற்றிற்கு அருகிலிருந்த பெண்ணிற்கு ஐந்து புருஷர்கள் இருந்தார்கள் என்றும், இப்போது அவளோடு வாழ்பவன் அவளுடைய புருஷன் அல்ல என்பதையும், அவர் அறிவை உணர்த்தும் வசனத்தால் அறிந்து கொண்டார் (யோவா. 4:18). எல்லா மனிதரையும் அவர் அறிந்திருந்தார் (யோவா. 2:24). அநேகருடைய இருதயத்தின் நினைவுகள் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டன (லூக். 2:35; 5:22; 6:8; 9:47).

*ஆவிக்குரிய அறிவு*

அறிவை உணர்த்தும் வசனமென்பது ஆவிக்குரிய அறிவைப் போன்றதல்ல. ஆவிக்குரிய நிலையில் வளருவதன் மூலமாகவே ஆவிக்குரிய அறிவு பெறப்படுகிறது. ஆனால், அறிவை உணர்த்தும் வசனமோ ஒரு ஈவைப்போல உடனடியாகக் கொடுக்கப்படுகிறது. நமக்குக் கொடுக்கப்பட்ட மகா பெரியதும் விலையேறப்பெற்றதுமான வாக்குத்தத்தங்களால், நாம் ஆவிக்குரிய அறிவில் வளருகிறோம் (2 பேது. 1:2–4). நமது ஆவி மனிதனின் முன்னேற்ற விகிதத்தைப் பொறுத்தே ஆவிக்குரிய அறிவு பெருகுகிறது.

சில நேரங்களில் ஆவிக்குரிய அறிவின் மூலமாக, சில காரியங்களை நாம் பெற்று அறிந்துகொள்கிறோம். இது அறிவை உணர்த்தும் வசனத்தின் செயல்பாடு அல்ல. ஆனால், ஆவிக்குரிய ஞானத்தின் செயல்பாடாகும். இது மனித ஆவியின் சத்தமேயன்றி, தேவ ஆவியானவரின் சத்தமல்ல. ஆவிக்குரிய அறிவு உள்ளான அபிஷேகத்தினால் செயல்படுகிறது, ஆனால் அறிவை உணர்த்தும் வசனம், மேலுள்ள அபிஷேகத்தின் மூலமாக செயல்படுகிறது.

நமது மனித ஆவியினால் நாம் காரியங்களை அறியமுடியும். மனித ஆவியினால் நாம் அறிந்துகொள்ளும் அந்தக்காரியங்களுக்கு ‘கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்’ என்று நாம் சொல்லக்கூடாது. மாறாக ‘நான் காண்கிறேன்’ என்று சொல்ல கற்றுக்கொள்ள வேண்டும். மாயவித்தைக்காரனாகிய சீமோனின் ஆவிக்குரிய நிலையை, பேதுரு தனது அனுபவத்தின் மூலமாகவும் ஆவிக்குரிய அறிவின் மூலமாகவும் சொன்னார் (அப். 8:21–23). சீமோன் கசப்பினாலும், அநியாயத்தினாலும் விஷமூட்டப்பட்டதை பேதுரு கண்டார்.

அறிவை உணர்த்தும் வசனத்திற்கும் ஆவிக்குரிய அறிவிற்கும் உள்ள வித்தியாசத்தை, அநேக கிறிஸ்தவர்கள் வேறுபடுத்துகிறதில்லை. அவர்கள் உபதேச தவறுகளிலும் தவறான

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

செயல்முறைகளிலும் முடிவடைகின்றனர். மனதில் தோன்றும் மற்றும் கிரகிக்கப்படும் ஒவ்வொரு உள்ளான எண்ணத்தையும், அறிவை உணர்த்தும் வசனமாக 'கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்' என்று சொல்கிறார்கள். தொடர்ந்து வரும் சம்பவங்கள் அவைகள் தவறானதென்று நிரூபிக்கப்படும்பொழுது, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்திற்கு அவைகள் நிந்தையைக் கொண்டுவரும்.

மனித ஆவியின் சத்தத்திற்கும், பரிசுத்த ஆவியானவரின் சத்தத்திற்குமுள்ள வேறுபாட்டை கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். உள்ளான அபிஷேகத்தையும் மேலிருக்கும் அபிஷேகத்தையும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இவைகள் இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை அறியும் ஆவிக்குரிய முன்னேற்றமில்லாமல், பரிசுத்த ஆவியானவருடைய வரங்களின் செயல்பாட்டில் அநேக துள்ளியமின்மைகள் காணப்படும்.

*ஆவிகளைப் பகுத்தறிதல்*

ஆவிகளைப் பகுத்தறியும் வரம் என்பது, பிசாசுகளைப் பார்ப்பதற்கு மட்டுமுள்ள திறமை அல்ல. ஆவிகளைப் பகுத்தறிதல் என்பது ஆவிக்குரிய உலகத்திற்குள்ளே பார்ப்பதற்காக, பரிசுத்த ஆவியானவர் பகிர்ந்தளித்த இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றலாகும். ஆவிகள் தேவதூதனா, தேவனா அல்லது அசுத்த ஆவிகளா என்று பார்ப்பதற்குரிய ஆற்றலாகும். இந்த வரம் தனக்கு இருப்பதாக உரிமை பாராட்டி ஒவ்வொரு நாற்காலிகளுக்கு கீழேயும் பிசாசுகளை மட்டும் பார்க்கும் ஒருவர், பரிசுத்த ஆவியானவரால் செயல்படுத்தப்படாமல், சந்தேகம் மற்றும் பயத்தின் ஆவியினால் செயல்படுத்தப்படுகிறார்.

ஆவிகளைப் பகுத்தறிவதில் மூன்று முக்கிய செயல்பாடுகள் உள்ளன: மூடப்பட்ட தரிசனம், திறந்த தரிசனம் மற்றும் ஆவிக்குரிய தரிசனம். இந்த வரம் செயல்படும்பொழுது, இந்த மூன்று வகையான தரிசனங்கள்தான் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்த மூன்று வகையான தரிசனங்களும் மூன்று பிரிவுகளில் வர முடியும்: உருவக தரிசனம், செய்தி தரிசனம் மற்றும் வெளிப்படையான தரிசனம்.

*மூன்றுவகையான தரிசனம்*

மூடப்பட்ட தரிசனம் என்பது, மயக்கம் போன்ற நிலையில் ஒரு நபர், ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தை பெறுவதாகும். ஒரு நபரின் சரீர புலன்கள் மட்டுமே விழிப்போடிருக்கும். பௌதீக மண்டலத்தில் என்ன நடைபெறுகிறது என்பதை முழுமையும் அறியாத நிலையில் இருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வகை தரிசனத்தில் இருந்தபோது, சரீரத்தில் இருந்தாரா அல்லது ஆவியில் இருந்தாரா என்று அவருக்கு உறுதியாகத் தெரியவில்லை (2 கொரி. 12:2). புறஜாதிகளைப் பற்றி ஒரு மறைக்கப்பட்ட தரிசனத்தில், பேதுரு மயக்கம் போன்ற நிலையிலிருந்தார் (அப். 10:10–16). கனவுகளும் ஒரு வகையான மறைக்கப்பட்ட தரிசனமே, ஏனெனில் சரீரத்தின் பௌதீக புலன்கள் செயலிழந்திருக்கிறன.

திறக்கப்பட்ட தரிசனத்தில், பௌதீக மண்டலத்தில் முழுமையான உணர்வோடிருக்கும் நிலையில், ஒரு நபருக்கு ஆவிக்குரிய மண்டலம் திறக்கப்படுகிறது. ஒரே நேரத்தில் அந்த நபர் ஆவிக்குரிய மண்டலம் மற்றும் பௌதீக மண்டலம் ஆகிய இரண்டையும் காண்கிறார். தூப பீடத்தின் வலது பக்கத்தில் தேவதூதன் நின்றுகொண்டிருப்பதை சகரியா ஒரு திறந்த தரிசனத்தில் பார்த்தார் (லூக். 1:11). சிறைச்சாலையிலிருந்து தன்னை நடத்திச் சென்ற தேவ தூதனை, பேதுரு திறந்த தரிசனத்தில் பார்த்தார் (அப். 12:6–11).

ஆவிக்குரிய தரிசனம் என்பது மிகவும் தாழ்ந்த வகையான தரிசனம். ஆனால், மிகவும் உயர்வான வெளிப்பாடு ஆகும். இது அதிகமாக ஒரு மனதின் தரிசனத்தைப்போல் இருப்பதால், இதுதான் மிகவும் தாழ்ந்த வகையான தரிசனமாகும். மிகவும் சரியாகச்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

சொல்லப்போனால், ஆவி மனிதனின் உள்ளான கண்களால் காண்பதுதான் இது. இதுதான் மிகவும் உயர்ந்த வகையான வெளிப்பாடு ஆகும். ஏனெனில் ஒரு திறந்த தரிசனம் மற்றும் மூடப்பட்ட தரிசனத்திற்கு கீழ்ப்படிவதைக் காட்டிலும், ஆவிக்குரிய தரிசனத்திற்கு கீழ்ப்படிய, அதிக விசுவாசம் தேவைப்படுகிறது.

சரீரத்தில் பார்க்க முடியாத தனது பலவீனத்தில், சரீர மண்டலத்தில் இன்னும் அவர் உணர்வுள்ளவராயிருந்தபோது, அனனியா வந்து தன்மேல் கைகளை வைப்பதை, பவுல் ஆவிக்குரிய தரிசனத்தில் கண்டார் (அப். 9:11–12). இவ்வகையான தரிசனம் பொதுவாக, கண்கள் மூடப்பட்ட நிலையில் காண்பதாகும். ஆவிக்குரிய பயிற்சி மற்றும் முன்னேற்றத்தைக் கொண்டு, அவரது சரீர கண்கள் திறந்திருந்தாலும், ஒரு நபர் இதைப் பெற்றுக்கொள்ள முடியும். ஜனங்கள் இதை சில நேரங்களில், 'சிறிய தரிசனம்' அல்லது 'பளிச்சிடும் தரிசனம்' என்கின்றனர். கற்பனையின் திரையில் மின்னலைப்போல வேகமாக மனதின் பிம்பங்கள் பளிச்சிடும்.

*மூன்று பிரிவுகளாக தரிசனங்கள்*

தரிசனங்களில் முதல் பிரிவு உருவக தரிசனம். இவ்வகை தரிசனத்தில் காண்பதெல்லாம் மற்றொன்றிற்கு அறிகுறியாக இருக்கும். இது ஒரு உவமையைப் போன்றது. இதற்கு வியாக்கியானம் தேவைப்படுகிறது. பல்வேறு வகை தேசங்களை குறிப்பிடும் மிருகங்கள் மற்றும் விலங்குகளின் தரிசனத்தை தானியேல் பார்த்தார் (தானி. 7:4–7; 8:4–8). புற ஜாதிகளை குறிப்பிடும், சுத்தமில்லாத மிருகங்களின் தரிசனத்தை பேதுரு பார்த்தார் (அப். 10:11, 12). இந்தப் பிரிவு தரிசனத்தை வியாக்கியானம் செய்வது மிகவும் கடினமானதாகும். இவ்வகை தரிசனத்தின் வியாக்கியானமும் பரிசுத்த ஆவியானவரால்தான் கொடுக்கப்பட வேண்டும்.

இந்த தரிசனத்தை வியாக்கியானம் செய்வதில் மிக அத்தியாவசியமான விதிகளில் ஒன்று என்னவெனில், தரிசனத்தில் உள்ள எல்லா அறிகுறிகளும் தேவவார்த்தைக்கு ஒத்ததாக இருக்க வேண்டும். உதாரணமாக, ஒரு பாம்போ அல்லது நாயோ வேதத்தில் பொல்லாங்கானதாக குறிப்பிடப்படுமானால், உருவக தரிசனத்தில் அந்த அறிகுறியான பாம்போ அல்லது நாயோ, பொங்கானதைக் குறிப்பதாகவே வியாக்கியானம்பண்ணப்பட வேண்டும். இந்த பிரிவு தரிசனத்தை நாம் பெற்றுக்கொள்ளும்போது, சரியான வியாக்கியானத்திற்காக, தேவனிடம் காத்திருக்க கற்றக்கொள்ள வேண்டும்.

இரண்டாம் பிரிவு தரிசனங்கள் செய்தி தரிசனமாகும். இந்த குறிப்பிட்ட தரிசனம் முக்கிய செய்தியை பகிர்ந்தளிக்க நாடுகிறது. மற்றொன்றிற்கு அறிகுறியாக இல்லாததால், இது உருவக தரிசனம் அல்ல. தரிசனத்தில் கண்டதுபோல, நிகழ்வுகள் நிறைவேறுவதால் இது வெளிப்படையான தரிசனமும் அல்ல. துரோவாவில் பவுல் காத்திருந்தபோது, அவருக்கு ஒரு செய்தி தரிசனம் கிடைத்தது. மக்கெதோனிய நாட்டு மனிதன் ஒருவன், அங்கு வந்து தங்களுக்கு உதவி செய்ய, தன்னை அழைத்ததாக பவுல் பார்த்தார் (அப். 16:9).

இது வெளிப்படையான தரிசனம் அல்ல என்று பவுல் விளங்கிக் கொண்டார். ஏனெனில் பவுல் மக்கெதோனியாவிற்கு சென்றபோது, தரிசனத்தில் பார்த்த அந்த மனிதனை தேடி அலையவில்லை. மாறாக மக்கெதோனியாவில் அவரது முதல் ஊழியமே பெண்மணிகளுக்குத் தான் இருந்தது (அப். 16:13). செய்தி தரிசனம் அதைப் பெற்றுக்கொள்பவருக்கு, ஒரே ஒரு பிரதான செய்தியை மட்டும்தான் சுமந்து வருகிறது. தனது மக்கெதோனிய தரிசனத்தில், பவுல் பெற்றுக்கொண்ட முக்கிய செய்தி என்னவெனில், தான் மக்கெதோனியாவிற்கு போக வேண்டும் என்று தேவன் விரும்பினார் என்பதே.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

தரிசனங்களின் மூன்றாம் பிரிவு, வெளிப்படையான தரிசனம் ஆகும். இந்த தரிசனத்தில் எல்லாக்காரியங்களும் நபர்கள், நிகழ்வுகள், சூழ்நிலைகள் – தரிசனத்தில் கண்டதின்படியே நிறைவேற வேண்டும். அப்படிப்பட்ட தரிசனங்களில் நாம் காணும் மக்களின் ஆடைகளும் கூட சரியானதாயிருக்க வேண்டும். மற்ற இரண்டு பிரிவுகளின் தரிசனங்களைப்போல் அல்லாமல், வெளிப்படையான தரிசனத்திற்கு வியாக்கியானம் எதுவும் தேவையில்லை. தரிசனத்தில் கண்டபடியே கச்சிதமாக நிறைவேறும். அனனியா வந்து தன்மேல் கைகளை வைக்கும் வெளிப்படையான தரிசனத்தை பவுல் பார்த்தார் (அப். 9:12).

*ஆவிக்குரிய பகுத்தறிதல்*

ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தை, ஆவிக்குரிய பகுத்தறிதலோடு அநேக மக்கள் குழப்பியுள்ளார்கள். ஆவிகளைப் பகுத்தறியும் வரம் என்பது, பரிசுத்த ஆவியானவரின் வரம். மேலுள்ள அபிஷேகம் வெளிப்படும்பொழுதுதான் இது செயல்படும். ஆவிக்குரிய பகுத்தறிதல் என்பது, ஆவிக்குரிய படிப்படியான வளர்ச்சியின் பலனால் வந்த மனித ஆவியின் முன் னேற்றமே. ஆவிக்குரிய பகுத்தறிதல் என்பது உள்ளேயுள்ள அபிஷேகத்தின் முன்னேற்றமே.

நாம் ஆவிக்குரிய நிலையில் வளரும்பொழுது, நன்மை தீமைக்கிடையே பகுத்தறிய, நமது ஆவிக்குரிய புலன்கள் பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும் (எபி. 5:14). பிலிப்பியருடைய அன்பு, பகுத்தறிவிலும் வளர வேண்டும் என்று பவுல் ஜெபித்தார் (பிலி. 1:9). நமக்குள்ளே இருக்கிற அபிஷேகம் ஆவிக்குரிய பகுத்தறிதலில் நமக்கு உதவிசெய்யும் (1 யோவா. 2:27). தீமையிலிருந்து நன்மையைப் பகுத்தறிவது, கிறிஸ்தவ வாழ்வின் அத்தியாவசிய பகுதியாகும். பகுத்தறியும் ஆற்றல் ஜெபத்தின் மூலமும் தேவ வார்த்தையை தியானிப்பதின் மூலமும் முன்னேற்றமடைகிறது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## *அத்தியாயம் 3*

# வல்லமை வரங்கள்

பரிசுத்த ஆவியானவரின் வல்லமை வரங்கள், சில காரியங்களை செய்கின்றன. இந்த மூன்று வரங்களில், மிகவும் முக்கியமானது விசுவாச வரமே. இந்த வரங்களில் ஒவ்வொன்றும் தேவ வல்லமையின் ஒரு அம்சத்தை விடுவிக்கிறது. வெளிப்பாட்டு வரங்களில் உள்ளது போலவே இந்த எல்லா வல்லமை வரங்களும், ஆவியானவர் விரும்பும் பொழுதும் மற்றும் மேலுள்ள அபிஷேகம் வெளிப்படும்பொழுதும் மட்டுமே செயல்படும்.

### *விசுவாச வரம்*

ஒரு அற்புதத்தைப் பெற்றுக்கொள்ள, தேவனால் பகிர்ந்தளிக்கப்படும் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலே விசுவாச வரமாகும். விசுவாச வரம் மூன்று பகுதிகளில் செயல் படுகிறது: பத்திரப்படுத்துதல், தேவையான பொருட்களை அளித்தல், பிரகடனப்படுத்துதல், மற்றும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச்செல்லப்படுதல். இயற்கையான வழியில் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு அற்புதத்தை பெற்றுக்கொள்ள, ஒரு நபருக்குள் உடனடியாக செலுத்தப்படும் இயற்கைக்கப்பாற்பட்ட விசுவாசமே இது. பிரகடனப்படுத்தும் பகுதியைத் தவிர, இந்த வரத்தை அப்பியாசிக்கும் நபர் இளைப்பாறுகிறவராகவே இருக்கிறார்.

தானியேல் இந்த விசுவாச வரத்தின் மூலமாக, சிங்கங்களுக்கு தப்புவிக்கப்பட்டார் (தானி. 6:16; எபி. 11:33). தனது அற்புதமான விடுதலையைப் பெற்றுக்கொண்டபோது, தானியேல் பதறாமலிருந்தார். சிங்கங்களோடு யுத்தம்பண்ண வேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை. அற்புதங்களை நடப்பிக்கிறதின் மூலமாக, சிம்சோன் சிங்கத்தை கிழித்து எறிந்தான் (நியா. 14:6). சிங்கத்தினுடைய உண்மையான ரோமத்தை தனது தலையனையாக பயன்படுத்தி, தானியேல் ஒரு நல்ல இரவு இளைப்பாறுதலை அனுபவித்தார். தனது சொந்த ஊரிலே மலையுச்சியிலிருந்து தள்ளிவிடப்படுவதிலிருந்து, இயேசு தனது விசுவாச வரத்தினாலே தப்புவிக்கப்பட்டார் (லூக். 4:28, 29). அந்த ஊர் மக்கள் ஏற்கெனவே அவரை மலையுச்சிக்கு அழைத்துச் சென்றிருந்தனர். திடீரென்று விசுவாச வரம் வெளிப்படுத்தப்பட்டிருந்திருக்க வேண்டும். அவர்கள் மத்தியிலே அவர் நடந்துபோன போது, அவரை தொட யாருக்கும் தைரியம் இல்லை (லூக். 4:30).

பஞ்சகாலத்தின் முதல் பகுதியிலே காகங்களினால் போஷிக்கப்பட்டு, இயற்கைக்கு அப் பாற்பட்ட நிலைமையிலே எலியா விசுவாசத்தின் மூலமாக நடத்தப்பட்டார் (1 இராஜா. 17:4). காகங்கள்தான் பறவைகளிலே மிகவும் கஞ்சத்தனமானது. எனினும் தேவ அற்புதத்தால், எலியாவிற்கு அவைகள் உணவு கொண்டுவந்தன. அற்புதமான வழிகளில் இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் விசுவாசவரம் உணவைக் கொண்டு வந்தது. விசுவாசம் அதன் வெளிப்படுத்துதலின் போது பேசப்படும் வார்த்தைக்கு, அது செயல்படும்போது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை கொண்டு வருகிறது. இதுதான் பிரகடணப்படுத்துதலினுடைய விசுவாசத்தின் செயல்பாடு ஆகும். விசுவாசத்தினால்தான் பிசாசு கள் துரத்தப்படுகின்றன. இதே விசுவாசத்தின் மூலமாகத்தான், மரித்துப்போனவர்களின் ஆவிகளையும் திரும்ப அழைக்க முடியும்.

மரித்தவர்களை உயிரோடு எழுப்பும்போது, மூன்று வரங்கள் செயல்பாட்டில் உள்ளன. மரித்த செல்களை உயிர்ப்பிக்க அற்புதங்களை செய்தலும், எந்த வியாதியின் காரணத்தினால் அந்த சரீரதம் மரித்ததோ அந்த வியாதியை சுகமாக்க சுகமாக்கும் வரங்கள், மரித்தவரின் ஆவியை திரும்ப அழைக்க விசுவாச வரம். விசுவாச வரத்தின் மூலமாக இயேசு அசுத்த ஆவிகளை ஒரே வார்த்தையினால் துரத்தினார் (மத். 8:16). விசுவாச வரத்தின் மூலமாக, தொற்காளை மரித்தோரிலிருந்து எழுப்ப பேதுரு கூப்பிட்டார் (அப். 9:40).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

விசுவாச வரம்தான் மக்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு, இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் கொண்டு செல்கிறது. விசுவாச வரத்தில் எலியா மிகவும் அதிகமாக செயல்பட்டவர். பரிசுத்த ஆவியானவரால் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுவது, அவருக்கு சர்வ சாதாரணமாயிருந்தது. அவர் பரலோ கத்திற்கு ஏறிச்சென்ற பிறகும், ஆவியானவரால் மலைகளுக்கு அவர் எடுத்துச் செல்லப்பட்ட தருணங்களில் இதை ஒன்றாக, தீர்க்கதரிசிகளின் புத்திரர் நினைத்தார்கள். என்வே அவரை தேடுவதற்காக ஒரு குழுவை அனுப்பினார்கள் (2 இராஜா. 2:16). இஸ்ரவேல் இராஜாவின் பாய்ந்து செல்லும் குதிரைகளின் வேகத்திற்கு அதிகமாக, விசுவாச வரத்தினால் அவர் ஓடினார் (1 இராஜா. 18:46). விசுவாச வரத்தினால் ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் (ஆதி. 5:24; எபி. 11:5).

*விசுவாசத்தில் வளருதல்*

விசுவாசத்தில் வளர்வது, ஆவிக்குரிய வரத்தின் நேரடி விளைவாகும். ஆனால், விசுவாச வரமோ உடனடியாக பகிர்ந்தளிக்கப்பட்டதும் உட்செலுத்தப்பட்டதுமான வரமாகும். நாம் மறுபடியும் பிறந்தபோது நாம் ஒரே அளவு விசுவாசத்தை பெற்றுக்கொண்டோம் (எபே. 2:8). அதிலிருந்து விசுவாசத்தில் முன்னேறி வளரவேண்டும். விசுவாசம் தேவ வார்த்தையை கேட்பதினால் வளருகிறது (ரோம. 10:17). தெசலோனிக்கேயர்கள் விசுவாசத்தில் மிகவும் அதிகமாக வளர்ந்தார்கள் (2 தெச. 1:3).

விசுவாசத்தில் வளர நேரம் செலவிட வேண்டும். நமது விசுவாசத்தினால் நாம் எதையாகிலும் பெற்றுக்கொள்ளும்போது, விதைப்பும் அறுப்பும் விதிகள் செயல்படுகின்றன. வேத வசனத்தை தியானிப்பதற்கு நாம் நேரமெடுக்க வேண்டும். எனினும், விசுவாச வரம் நமக்கு பகிர்ந்தளிக்கப்படும்போது, ஒரு செயலை செய்து முடிக்க, இயற்கைக்கு அப்பாற்பட்ட விசுவாசம் நமக்கிருக்கும். ஒரு குறிப்பிட்ட நபருக்கு, ஒரு குறிப்பிட்ட வேலைக்காக, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் விசுவாச வரம், இயற்கைக்கப்பாற்பட்ட விசுவாச பகிர்ந்தளிப்பாக வருகிறது. அந்த வேலை முற்றுப்பெறும்போது, அந்த நபர் அவர் வளர்ந்திருந்த சாதாரண விசுவாச நிலைக்கு வந்துவிடுகிறார்.

தேவன் செய்து முடிக்க நினைக்கும் சில காரியங்களுக்கு, நமது விசுவாசம் வளர அவர் காத்திருக்க வேண்டியதானால், சில வேலைகள் செய்து முடிக்கப்படுவதற்காக ஒரு நித்திய காலமே ஆகலாம். இந்தக் காரணத்திற்காகவே, அவருக்கு ஒரு வேலை செய்து முடிக்கப் பட வேண்டுமானால், அந்த வேலையை செய்து முடிப்பதற்காக அவர் தெரிந்தெடுத்த பாத்திரத்திற்கு, அவர் விசுவாச வரத்தை பகிர்ந்தளித்திருக்கிறார். ஒரு நபர் சோம்பேறியாய் இருந்து, வளர்ச்சியினாலே தனது விசுவாசத்தை முன்னேற்றமடையச் செய்யாதிருந்தால், அவரில் விசுவாச வரத்தை செயல்படுத்த முடியாது. ஏனெனில் இது ஒரு குறிப்பிட்ட வேலைக்காகவே, எல்லா வேலைகளுக்கும் அல்ல.

விசுவாசத்திற்கும், விசுவாசத்தில் வளருவதற்கும் உள்ளதை நாம் வித்தியாசப்படுத்தி காண்பிக்க வேண்டும். ஒன்று வரம்; மற்றது வளர்ச்சி. மேலுள்ள அபிஷேகம் வெளிப் படுத்தலில் இருக்கும்பொழுது முன்புள்ளது செயல்படுகிறது. பின்புள்ளது உள்ளேயுள்ள அபிஷேகம் முன்னேற்றமடைவதால் செயல்படுகிறது. ஆவியானவர் விரும்பும்போது, நாம் விசுவாச வரத்தில் செயல்பட வேண்டும். அதே நேரத்தில் நமது கிறிஸ்தவ வாழ்வில், ஆவி ஆத்துமா சரீரத்தில் வெற்றி அடைய, தொடர்ந்து விசுவாசத்தில் வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

ஒரு அற்புதத்தை செய்வதற்காக தேவனால் பகிர்ந்தளிக்கப்படும் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலே, அற்புதங்களை நடப்பிக்கும் வரமாகும். இது விசுவாச வரத்தை விட மாறுபட்டது. ஏனெனில், இதைப் பெற்றுக்கொள்பவர் அற்புதத்தை நடப்பிப்பதில் உற்சாகமாக ஈடுபடவேண்டும். வேதாகமம் 'அற்புதங்கள்' என்று பன்மையில் பயன்படுத்துவதன் காரணம் என்னவென்றால், இது அற்புதங்களின் ஐந்து பகுதிகளில் செயல்படுகிறது: இயற்கையின் விதிகளுக்கு மேலே கடந்து செல்லுதல், உடனடியான சுகமாக்குதல், உருவாக்கும் அற்புதங்கள், அபிஷேகத்தின் விசேஷ நடைமுறை செய்து காண்பித்தல், அடையாளங்களை யும் அற்புதங்களையும் செய்தல்.

இயற்கையான விதி ஒன்று மீறப்படும்பொழுது, இயற்கையின் விதிகளை சட்ட விரோத மாக மீறுவதென்பதல்ல. மிகச்சரியாக சொல்ல வேண்டுமானால், உயர்வான ஆவிக்குரிய விதியினால், இயற்கையான விதிகளுக்கு மேலே கடந்து செல்வதாகும். அற்புதங்களை செய்வதின் மூலமாக, எல்லா இயற்கை விதிகளுக்கு மேலாகவும் செல்ல முடியும். அற்புதங்களை செய்யும் சக்தியால் மோசே நாற்பது நாட்கள், இரவும் பகலும் உணவும் தண்ணீரும் இல்லாமல் இருக்க முடிந்தது (உபா. 9:9). இந்த நாட்களில் அவர் தூக்கம் இல்லாமலும் இருந்திருக்க வாய்ப்பிருக்கிறது.

இயேசு தண்ணீரின் மேல் நடந்தபோது, பரிசுத்த ஆவியானவரின் இரண்டு வரங்களில் செயல்பட்டார். விசுவாச வரத்தில் செயல்பட்டார். ஏனெனில், தரையில் நடப்பதைப் போல தண்ணீரின் மேல் சர்வ சாதாரணமாக நடந்து கொண்டே இருந்தார்; அற்புதங்களை நடப்பிக்கும் வரத்திலும் செயல்பட்டார், ஏனெனில் புவியீர்ப்பு விசையின் விதிக்கு மேலே கடந்து சென்றுவிட்டார் (மத். 14:25).

அற்புதங்களை நடப்பிக்கும் வரத்தில் இரண்டாவது பகுதி உடனடியான அற்புதங்களாகும். சுகமாக்கும் வரங்களினால் சுகமாக்கப்படும்பொழுது, சரீரம் முழுமையான சாதாரண செயல் நிலைக்கு வர, கொஞ்ச நேரமெடுக்கும். அப்படியென்றால், சுகத்தைப் பெற்றுக்கொள்கிற நபர் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் சுகமாகிறார் என்று அர்த்தமாகாது (இது தனிப்பட்ட விசுவாசத்தால் பெற்றுக்கொண்ட சுகமாயிருக்கும்). மாறாக, ஒரு நபர் சுகமாக்கும் வரங்களால் சுகமடையும்பொழுது, எந்த வியாதியானாலும் அவர்கள் உடனடியாக சுகமாகிறார்கள். ஆனால், தங்கள் சரீரம் வழக்கமான பெலனடைய நேரம் எடுக்கும்.

உதாரணமாக, ஒரு நபர் பலவருடங்கள் படுக்கையிலிருந்து உடனடியான சுகம் பெற்றாலும், அவரது சரீரம் வழக்கமான பெலனை அடைய நேரமெடுக்கும். சுகமாக்கும் வரங்களினால் வரும் சுகமும் உடனடியானதாய் இருக்கும். ஆனாலும் அற்புதங்களை நடப்பிக்கும் வரத்தினால் செயல்படுத்தப்படும் சுகத்தைப்போல தத்ரூபமாயிருக்காது. அதே நபர் அற்புதங்களைச் செய்யும் வரத்தினால் சுகமாகும்பொழுது, ஒன்றிற்கு (உடனடியான சுகமாகுதல்) பதிலாக இரண்டு காரியங்கள் நடைபெறும். உடனடியான சுகத்தோடு வழக்கமான பெலனின் இயற்கைக்கப்பாற்பட்ட சீர் நிலைக்கு அந்த நபர் திரும்பியிருப்பார். எருசலேம் தேவாலயத்தின் அலங்கார வாசலில் இருந்த முடவனான மனிதன், அற்புதங்களை நடப்பிக்கும் வரத்தால் சுகமாக்கப்பட்டான். ஏனெனில் சுகத்தையும், இதற்கு முன்பு ஒரு முறை கூட அவன் நடக்காமலிருந்தாலும் நடக்கும் மற்றும் குதிக்கும் ஆற்றல் ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் பெற்றுக்கொண்டான் (அப். 3:8).

எல்லா உருவாக்கும் அற்புதங்களும் அற்புதங்களை நடப்பிக்கும் வரத்தின் கீழ் வகைப் படுத்தப்படும். அற்புதங்களை நடப்பிக்கும் வரத்தின் மூன்றாவது பகுதியே இது. எலியா விதவையின் வீட்டில் தங்கியிருந்தபோது, அற்புதங்களை நடப்பிக்கிற வரத்தால், பானையில் மாவும் கலசத்தில் எண்ணெயும் பெருகிற்று (1 இராஜா. 17:14–16). அற்புதங்களை நடப்பிக்கும் வரத்தால், இயேசுவும் ஐந்தப்பம் இரண்டு மீன்களை பெருகச் செய்தார் (மத். 14:19, 20).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

இயேசு தனது ஊழியத்தில், அநேக உருவாக்கும் அற்புதங்களை நடப்பித்தார் (மத். 15:30, 31). ஊனர்களான அநேகர் சுகமாக்கப்பட்டார்கள். ஊனர்கள் என்பது, தங்கள் கரங்கள், கால்கள், சரீர உறுப்புகளை இழந்தவர்களைக் குறிக்கும். அற்புதங்களை நடப்பிக்கும் வரத்தால், இயேசு அநேகருடைய சரீர உறுப்புகளை பழை சீர் நிலைக்கு கொண்டுவந்தார். பரிசுத்த ஆவியானவரின் இந்த கடைசியான மிகப்பெரிய அசைவாடுதலில், உருவாக்கும் அற்புதங்களை நடப்பிக்கும் இந்த வரத்தின் விசேஷ வெளிப்படுத்துதலை, தேவன் அருளிச் செய்வார் என்று நான் நம்புகிறேன்.

அற்புதங்களை நடப்பிக்கும் வரத்தின் நான்காம் பகுதி, அபிஷேகத்தின் விசேஷ செயல் முறை காண்பித்தல்களாகும். அபிஷேகத்தின் வல்லமையுள்ள செயல்முறை காண்பித்தல் களால், அற்புதமான சுகமாக்குதல்கள் நடைபெறும். அப்படிப்பட்ட கூட்டங்களில் தேவ பிரசன்னம் தேவ மகிமையோடு மிகவும் உறுதியாகவும் பலமாகவும் இருக்க முடியும். அற்புதங்களை நடப்பிக்கும் வரத்தின் மூலமாக, பேதுரு தனது நிழலினால் அற்புதங்களை நடப்பித்தார் (அப். 5:15). பேதுருவின் நிழல் பட்ட இடங்களிலெல்லாம் அற்புதங்கள் நடைப் பெற்றன. பவுலின் கரங்களிலால் எபேசு பட்டணத்தில் விசேஷித்த அற்புதங்களை தேவன் நடப்பித்தார். பவுல் தொட்ட கைக்குட்டைகளும் மேலாடைகளும் தேவ வல்லமையால் நிறைந்திருந்தன (அப். 19:11, 12). பரிசுத்த ஆவியானவரின் இந்த விசேஷித்த செயல் முறை காண்பித்தல், அற்புதங்களை நடப்பிக்கும் வரத்தால் நடைபெற்றது.

அற்புதங்களை நடப்பிக்கும் வரத்தின் ஐந்தாவது பகுதி, விசேஷித்த அடையாளங் களையும் அற்புதங்களையும் நடப்பித்தலாகும். பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுதலால், தேவன் விசேஷித்த அடையாளங்களையும் அற்புதங்களையும் செயல்முறைபடுத்திக் காண்பிப்பார் (அப். 2: 18:19). மாய வித்தைக்காரனாகிய எலிமாவுக்கு விரோதமாக பவுல், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை செயல்முறைப்படுத்திக் காண்பித்தார் (அப். 13:8, 11). கொஞ்சகாலம் எலிமா எதையும் காணக்கூடாதவனாய் இருந்தான். அனனியாவும் சப்பீராளும் மரித்தபோது, அது தேவனுடைய நியாயத்தீர்ப்பின் விசேஷித்த செயல்முறை காண்பித் தலாகும் (அப். 5:1–10). கிறிஸ்துவின் நாமத்திற்கு அது பெரும் புகழ்ச்சியை கொண்டு வந்த அடையாளமாய் இருந்தது (அப். 5:13).

*அற்புதங்களுக்காக தேவனை விசுவாசித்தல்*

பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறபடிதான், அற்புதங்களை நடப்பிக்கும் வரம் செயல் படுகிறது. எனினும் தேவவார்த்தையிலுள்ள வாக்குத்தத்தங்களை தியானிப்பதின் மூலம், தேவனை விசுவாசிக்க நாம் முன்னேற்றமடைய முடியும். ஆபிரகாமுக்கும் சாராளுக்கும், ஒரு உருவாக்கும் அற்புதம் தேவையாய் இருந்தது. ஆபிரகாமுக்கு தகப்பனாகும் பெலன் இருந்தாலும், சாராள் மலடியாயிருந்தாள் (ரோம. 4:14). பெண்களுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுபோய் அதிக நாளாயிற்று. இயற்கையான வழியில் அவர்கள் பிள்ளை களை பெற வழியேதும் இல்லை. ஒரு அற்புதம் மாத்திரம் அவர்களுடைய தேவை அல்ல, அவர்களுக்கு உருவாக்கும் அற்புதம் தேவை.

இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைத்து, ஆபிரகாமும் சாராளும் உருவாக்கும் அற்புதமொன்றிற்கு தங்கள் விசுவாசத்தை அப்பியாசித்தார்கள். தேவனுக்கு மகிமையை செலுத்தி ஆபிரகாம் விசுவாசத்தில் வல்லவனானான் (ரோம. 4:17, 20). ஒரு அற்பதத்திற்காக நாம் நமது விசுவாசத்தை அப்பியாசிக்க விரும்பினால், நாம் தியானிக்கும் படியான அநேக வேதாகம வாக்குத்தத்தங்கள் உள்ளன. விசுவாசிக்கிறவர்களுக்கு எல்லாம் கூடும் என்று இயேசு சொன்னார் (மாற். 9:23). விசுவாசமுள்ளவர்களுக்கு கூடாத காரிம் என்று ஒன்றுமிராது (மத்.17:20).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

அற்புதங்களுக்காக நமது விசுவாசத்தை அப்பியாசிப்பது, ஆவி மனிதனின் முன்னேற்றம் ஆகும். ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு விசுவாசம் வளருகிறது. நாம் தேவ வார்த்தையை தியானிப்பதனால், நமது வாழ்க்கையில் அப்புதங்களுக்காக தேவனை விசுவாசிக்கலாம். அற்புதங்களுக்காக தேவனை விசுவாசிப்பது, மறுபடியும் பிறக்கும் எல்லாருக்கும் தேவன் கொடுக்கும் விசுவாசியின் அபிஷேக குழாயை திறந்துவிடுகிறது. நமது விசுவாசத்தை அப்பியாசிப்பதால் உண்டாகும் அற்புதங்களின் தன்மையும் சாராம்சமும், அற்புதங்களை நடப்பிக்கும் வரத்திற்கு சமமானதாகும். எனினும், தேவ வார்த்தையை நாம் உறுதியாய் பற்றிக்கொள்வதால், அற்புதங்கள் படிப்படியாக வருகின்றன, ஆனால் அற்புதங்களை நடப்பிக்கும் வரத்தில் அது உடனடியாக நடைபெறுகிறது.

*சுகமாக்குதல்களின் வரங்கள்*

மனுக்குலத்தில் ஒருவருக்கு சுகத்தை செயல்படுத்த தேவானால் பகிர்ந்தளிக்கப்பட்ட இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றலே சுகமாக்குதல்களின் வரங்கள் ஆகும். மனிதன் மூன்று பகுதிகளினாலானவன். அவன் ஆவியினாலுண்டானவன், அவனுக்கு ஒரு ஆத்துமா இருக்கிறது, அவன் ஒரு சரீரத்தில் வாழ்கிறான். ஆவி மனிதனுக்கு சுகம் தேவையில்லை. ஆனால், அது மறுபடியும் பிறக்க வேண்டும். மனிதனுடைய ஆத்துமாவும் சரீரமும் தான் சுகமடைய வேண்டிய நிலையில் உள்ளன. ஆத்துமாவின் சுகமும் உள்ளது, சரீரத்தின் சுகமும் உள்ளது. ‘சுகமாக்குதல்கள்’ மற்றும் ‘வரங்கள்’ என்று பன்மையில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள், சுகமாக்குதல் களினுடைய வரங்களின் மூன்று செயல்பாடுகளைக் குறிக்கும்.

முதலாவது செயல்பாடு, சுகமாகுதல்களின் இரண்டு மண்டலங்களிலுள்ளது. ஆத்துமாவின் சுகமாகுதல்கள் மற்றும் சரீரத்தின் சுகமாகுதல்கள். ஆவிமனிதனுக்கு சுகம் அவசியமில்லை, ஆனால் மறுபடியும் பிறக்க வேண்டும். இருதயம் நருங்குண்டவர்களை குணமாக்கும், பரிசுத்த ஆவியானவர் தன் மேல் இருப்பதாக இயேசு சொன்னார் (லூக். 4:18). தங்கள் காயப்பட்ட ஆத்துமாவில் சுகம் அவசியமாயுள்ள அநேக மக்கள் உள்ளனர். அவர்கள் தங்கள் ஆத்துமாவில் சுகமடைந்தாலன்றி, தங்கள் சரீரத்தில் ஒருபோதும் சுகத்தைப் பெறமாட்டார்கள். ஜனங்கள் தங்கள் ஆத்துமா சரீரம் ஆகிய இரண்டிலும் சுகமடைய வேண்டியதாயுள்ளது.

சுகமாகுதல்களினுடைய வரங்களின் இரண்டாவது செயல்பாடு, சரீர சுகவீனத்தின் மூன்று காரணங்களுக்கு தேவ வல்லமையை பயன்படுத்துவதாகும். சரீர சுகவீனங்கள் சரீர உறுப்புகளின் சம்பந்தமாக வருகின்றன, நுண்ணுயிரிகள் சரீரத்தில் வந்து தாக்குவதினால் வரலாம் – வியாதிக்கிருமிகள், வைரஸ் மற்றும் பாக்டீரியா முதலியன – அல்லது பிசாசின் ஒடுக்குதலினால் வர முடியும். சரீர உறுப்புகள் சம்பந்தமாக வரும் வியாதிகள், சரீர உறுப்புகளில் அமைப்புகள் மாறுவதின் விளைவால் வருகின்றன. அல்லது இரசாயன சமச்சீர் குலைந்துவிடுவதினால் வருகின்றன. மிக மிக அதிகமான மற்ற வியாதிகள் நுண்ணுயிரிகள் சரீரத்தை தாக்குவதினால் வருகின்றன. சில வியாதிகள் பிசாசுகளினால் நேரடியாக வருகின்றன. ஒவ்வொரு வகையான வியாதிக்கும், பரிசுத்த ஆவியானவருடைய சுகமாக்கும் வரங்களின் வித்தியசமான உபயோகம் அவசியமாகும்.

சுகமாக்குதல்களினுடைய வரங்களின் மூன்றாவது செயல்பாடு, வித்தியாசமான ஊழியக் காரர்களுக்கு தேவன் அருளும் சிறப்பம்சத்திலுள்ளது. குருடானவர்களுக்கும் செவிடானவர் களுக்கும் ஊழியம் செய்ய சில ஊழியர்கள் வரம் பெற்றுள்ளனர். மற்றவர்களோ புற்றுநோய் வளர்ச்சிக்காக ஜெபிப்பதில் மிகவும் வெற்றியுள்ளவர்களாயிருக்கிறார்கள். மற்றவர்கள் முதுகு மற்றும் எலும்பு பிரச்சனையுள்ளவர்களுக்கு ஊழியம் செய்வதில் சிறப்பாயிருக் கிறார்கள். சுவிசேஷகனாகிய பிலிப்பு வாதநோய் உள்ளவர்களுக்கும் முடமானவர்களுக்கும் ஊழியம் செய்வதில் விசேஷ வரம்பெற்றிருந்தவராக காணப்படுகிறார் (அப். 8:7).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

சுகமாக்குதல்களின் வரங்கள் ஒரே ஆதாரத்திலிருந்து பாயும் பல ஆறுகளைப்போல் உள்ளன. பாடுபடும் மனுக்குலத்தின் பற்பல சுகமாக்கும் தேவைகளை மட்டுமின்றி, குறிப்பான தேவைகளையும் சந்திக்க, ஒவ்வொரு ஆறும் ஒரு குறிப்பிட்ட வகை அபிஷேகத்தோடு வருகிறது. பரிசுத்த ஆவியானவரது இந்த விசேஷ வரத்தால், மிகப்பெரிய மனதுருக்கம் பொதுவாக விடுவிக்கப்படுகிறது.

*சுகமாக்குதலுக்கு தேவனை விசுவாசித்தல்*

சுகத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகளை தேவன் திருச்சபையில் வைத்துள்ளார். ஒருவன் வியாதிப்பட்டால், சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக. அவர்கள் அவனுடைய சுகத்ததிற்காக இயேசுவின் நாமத்தில் எண்ணெயினால் அபிஷேகிக்கட்டும் (யாக். 5:14). அதுமட்டுமல்லாமல், கடந்து சென்று வியாதியஸ்தர்கள் மேல் கரங்களை வைத்து, அவர்களை சுகப்படுத்த விசுவாசிகளுக்கு கட்டளையுள்ளது (மாற். 16:18). சுகவீனமானவர்கள் தேவனுடைய சுகமாக்கும் வாக்குத்தத்தங்களை உரிமை கொண்டாடி, தங்களது சுகத்திற்காக தனிப்பட்ட விசுவாசத்தை அப்பியாசிக்கலாம். இவைகளெல்லாம் சுகமாகுதல்களினுடைய வரங்களின் விசேஷித்த செயல்முறை காண்பித்தல்களாகாது.

ஆவியானவர் விரும்பும்பொழுது மட்டும்தான் சுகமாகுதல்களின் வரங்கள் செயல்படும். ஆனால் எந்த நாளிலும் பகலோ அல்லது இரவோ, ஒரு விசுவாசி சுகத்திற்காக தேவ வாக்குத்தத்தங்களை உரிமை பாராட்ட முடியும். மேலுள்ள அபிஷேகம் வெளிப்படுத்தப் படாத நிலையில், உள்ளேயுள்ள அபிஷேகத்தை விசுவாசிகள் எப்பொழுதும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆவி மனிதன் முன்னேற்றமடைவதின் மூலமாக சுகமாகுதலின் விசுவாசம் படிப்படியாக பெருக முடியும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## *அத்தியாயம் 4*

# வாக்கு வரங்கள்

கிறிஸ்துவின் சரீரத்திலே வெளிப்படுத்தப்படுகிற, மிகவும் பொதுவானதும் அதிகமாக காணக்கூடியதுமான வரங்களே வாக்கு வரங்களாகும். எனினும், இந்த வாக்கு வரங்கள்தான் மிகவும் எளிதில் தவறாக பயன்படுத்தப்படுவதும், தவறாக விளங்கிக்கொள்ளப் படுவதுமான வரங்களுள் ஒன்றாகும். எல்லா வாக்கு வரங்களிலும், தீர்க்கதரிசன வரமே மிகப் பெரியதாகும். எனினும், பற்பல பாஷைகளை வியாக்கியானம் பண்ணும் வரத்தோடு சேர்ந்து பற்பல பாஷைகளைப் பேசும் வரம், தீர்க்கதரிசன வரத்திற்கு சமமானதாகும் (1 கொரி. 14:5).

### *தீர்க்கதரிசன வரம்*

ஒரு மனிதனக்கு தெரிந்த பாஷையில் தேவன் அருளும் இயற்கைக்கப்பாற்பட்ட வாக்கு களே தீர்க்கதரிசன வரமாகும். தீர்க்கதரிசனம் உரைப்பதற்கு உள்ள வெறும் அபிஷேகத்தை காட்டிலும் ஒரு தீர்க்கதரிசி, லட்சக்கணக்கான மடங்கு அபிஷேகத்தின் பெலனை உணர்வதைத் தவிர, தீர்க்கதரிசன வரம் செயல்படுவதற்குள்ள அபிஷேகம் தீர்க்கதரிசனம் சொல்வதற்கு ஒத்ததாயிருக்கிறது. எல்லா திர்க்கதரிசிகளும் இந்த வரத்தை செயல்படுத்துவது அவசியமாகிறது. ஆனால், இந்த வரத்தை செயல்படுத்தும் எல்லாரும் ஒரு தீர்க்கதரிசியின் ஸ்தானத்தில் நிற்பதில்லை.

இந்த வரத்தின் அடிப்படையான மூன்று செயல்பாடுகள் உள்ளன: பக்திவிருத்தி உண்டாக்க, புத்தி சொல்ல, ஆறுதல்படுத்த. தீர்க்கதரிசனத்தை பெற்றுக்கொள்பவர்களிடத்தில், இந்த ஒவ்வொரு செயல்பாடுகளும் வித்தியாசமான வேலைகளை செய்து முடிக்கின்றன. எல்லா தீர்க்கதரிசனமும் உறுதி செய்வதற்காக மட்டுமே, வழிநடத்த அல்ல. புதிய ஏற்பாட்டில் தீர்க்கதரிசன வரம் உறுதி செய்வதற்காக மட்டுமே செயல்படுகிறது. ஆனால், பழைய ஏற்பாட்டிலோ தீர்க்கதரிசன வரம் ஒவ்வொரு முறையும் கலந்தாலோசிக்கப்பட்டது.

தேவ ஜனங்களுக்கு வழிகாட்டுதல் அவசியம். வித்தியாசத்தின் காரணமென்னவெனில், புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் எல்லா இருதயத்திலும் வசிப்பதை, எல்லா விசுவாசிகளும் உடையவர்களாய் இருக்கிறார்கள், மாறாக பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள், மற்றும் இராஜாக்கள் மட்டுமே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருந்தனர். புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவராலும் வேத வசனத்தாலும் வழிநடத்தப்பட வேண்டுமே தவிர, எந்த ஒரு சுய பிரகடனப்படுத்திக்கொள்ளும் தீர்க்கதரிசியினால் அல்ல (ரோம. 8:14; எபி. 1:1, 2).

தீர்க்கதரிசன வரத்தின் முதலாவது செயல்பாடு, கிறிஸ்துவின் சரீரத்தை பக்திவிருத்தி அடையச் செய்வதே. 'பக்திவிருத்தி' என்ற வார்த்தை 'ஒய்கொமொனெ'('Oikomone') என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. இந்த வார்த்தை ஒரு வீட்டைக் கட்டுவதற்கு பயன் படும் வார்த்தையைக் குறிக்கிறது. 'வீடு' என்ற வார்த்தை அதே கிரேக்க வார்த்தை 'ஒய்கோஸ்' (Oikos) என்பதிலிருந்து வருகிறது. ஒரு வீட்டைக் கட்டுவதென்பது, கட்டிட நிபுணரின் ஒரு வரைபடத்தின்படி, பலவித பொருட்களையும் கொண்டு வந்து, அவைகளை ஒன்று சேர்ப்பதினால் நிறைவேறுதல் அடைகிறது. நமது வாழ்வினுடைய கட்டிட நிபுண வரைபடத்திற்கு, ஒரு பகுதி விவரங்களை அளிப்பதினால், தீர்க்கதரிசன வரம் நமக்கு பக்தி விருத்தியுண்டாக்குகிறது.

நமது அறிவும் குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது என்று பவுல் சொல்கிறார் (1 கொரி. 13:9). எருசலேமில் சிறைவாசம் தனக்கு காத்திருப்பதாக, பவுலுக்கு பரிசுத்த ஆவியானவர் சாட்சி கொடுத்தார் (அப். 20:22, 23). அங்கே அவருக்கு நடக்கும் காரியங்களை அவர் அறியவில்லை என்று பவுல் சொன்னார் (அப். 21:22).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

பொதுவாக என்ன நடக்கும் என்று பவுலுக்குச் தெரியும். ஆனால், குறிப்பான விவரங்களை அவர் அறிந்திருக்கவில்லை. பின்னர் அகபு பவுலுக்கு தீர்க்கதரிசனம் சொன்னபோது, என்ன நடக்கும் என்று அதிக விவரங்கள் அவருக்கு கொடுக்கப்பட்டன. பவுல் புறஜாதி களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்ற விவரத்தை அகபு தெரிவித்தார் (அப். 20:11). இந்த தீர்க்கதரிசனம் பவுலுக்கு பக்திவிருத்தியை உண்டாக்கிற்று. ஏற்கெனவே பவுல் பெற்றுக்கொண்டதை அது உறுதி செய்ததோடு, வரப்போகிற காரியத்திற்கு அவரை ஆயத்தமாக்கிற்று.

தீர்க்கதரிசன வரத்தின் இரண்டாவது செயல்பாடு புத்திசொல்லுதலாகும். 'புத்திசொல்லுதல்' என்ற வார்த்தை 'பேராகிளெசிஸ்' ('paraklesis') என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. அதன் பொருள் 'அருகாமையிலிருக்க அழைக்கப்படுதல்' ஆகும். தேவ சித்தத்திற்கு கீழ்ப்படியும் சில நேரங்களில், கிறிஸ்தவர்கள் தனிமையில் நடப்பதாக உணர்கின்றனர். அப்படிப்பட்ட நேரங்களில் அவர்களுக்கு புத்தி சொல்ல, தேவன் அவர்களுக்கு அருகாமையில்தான் நடக்கிறார் என்ற அவர்களை தைரியப்படுத்த, ஒரு தீர்க்கதரிசன வார்த்தை வரலாம். புத்தி சொல்ல தீர்க்கதரிசன வரம் செயல்படும்பொழுது, அந்த தீர்க்கதரிசனத்தை பெற்றுக்கொள்பவரது வாழ்வில், பலத்த தேவ பிரசன்னத்தைக் கொண்டு வருகிறது. யாருக்கு தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டதோ, அவருக்கு அது ஒரு ஆசீர்வாதத்தை – கூடுதலான பெலனை – பகிர்ந்தளிக்கிறது.

தீர்க்கதரிசன வரத்தின் மூன்றாவது செயல்பாடு, கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஆறுதலைக் கொண்டு வருவதே. தீர்க்கதரிசன வரத்தை குறிப்பிடும்பொழுது வரும், 'ஆறுதல்' என்ற வார்த்தை, 'பாராமுதியா' ('paramuthia') என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. அதன் பொருள் 'கூட வந்து ஆறுதல் செய்வது' (1 கொரி. 14:3). தனது வாழ்வில் தேவ சித்தத்தின் பாதையில் நடந்து வரும்பொழுது, சிலவேளைகளில் அவர் வழிவிலகி அல்லது வழியில் தடுமாறி விழுகிறார். அப்படிப்பட்ட வேளைகளில், தீர்க்கதரிசன வரம் தனது மூன்றாவது செயல்பாட்டில் அந்த நபரை ஆறுதல்படுத்துகிறது. குறியை தவறவிட்டதின் வலியை மென்மையாக்குவதும், அந்த நபர் தொடர்ந்து தேவனோடு செல்ல அவரை உற்சாகப்படுத்துவதுமே, இந்த ஆறுதலின் நோக்கமாகும். தடுமாறி வேதனையடைந்த அநேகர், விட்டுவிட சோதனையடைகின்றனர்.

*புத்தி சொல்லுதலின் ஆவிக்குரிய வளர்ச்சி*

ஆவியானவர் விரும்பும்பொழுது தீர்க்கதரிசன வரம் வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால், புத்திசொல்லும் ஆற்றல், எல்லா விசுவாசிகளுக்கும் நிரந்தரமாகவே உள்ளது. தேவ வார்த்தையினால் நாம் நிரம்பும்பொழுது சங்கீதங்களினாலும், பாடல்களினாலும், ஆவிக்குரிய பாடல்களாலும் போதிக்கவும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லவும், ஆற்றலுள்ளவர்களாய் இருப்போம் (கொலோ. 3:16). ஒரு வரத்தின் உடனடி வெளிப்படுத்தலாயிராமல், இந்த ஆற்றல் படிப்படியாக வளர்ச்சியடைந்ததைத் தவிர, தீர்க்கதரிசன வரத்தைப் போலவே இதுவும் அதே வேலையைப் போன்றதாகும். மேலுள்ள அபிஷேகத்தை விட உள்ளே உள்ள அபிஷேகத்தின் வெளிப்படையான செயல்பாடுதான் இது.

ஆவிக்குரிய முன்னேற்றத்தின் மூலமாக பக்திவிருத்தியடைய, நாம் நமது வார்த்தைகளை பயன்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். அதினிமித்தம் நமது வாழ்வின் மூலமாக, கிறிஸ்துவின் சரீரம் கட்டப்படும் (எபே. 4:29). கிறிஸ்துவின் சரீரத்தினுடைய ஒவ்வொரு அவையவமும் அன்பினால் சத்தியத்தை பேசுவதால், ஒவ்வொரு கணுக்களும் அதன் பகுதியை முழு சரீரத்திற்கும் கொடுப்பதினால், இயேசுகிறிஸ்துவின் திருச்சபை அன்பினால் தனக்கு பக்திவிருத்தி உண்டாக்கிக்கொள்ளும் (எபே. 4:15, 16). தீர்க்கதரிசன வரத்திற்கும், புத்திசொல்வதற்குள்ள ஆவிக்குரிய ஆற்றலுக்கும் உள்ள வித்தியாசத்தை விளங்கிக் கொள்வது, நமக்கு மிக முக்கியமானதாகும். ஒன்று பரிசுத்த ஆவியானவரின் வரம், மற்றொன்று வளர்ச்சியாகும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

*பாஷைகளின் வரம்*

வேதாகமம் இந்த வரத்தை, பற்பல பாஷைகளைப் பேசும் வரம் என்றழைக்கிறது (1 கொரி. 12:10). பற்பல பாஷைகளைப் பேசும் வரத்திற்கும், அந்நிய பாஷையில் ஜெபிக்கும் வரத்திற்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. பற்பல பாஷைகளைப் பேசும் வரம் என்பது, அறியாத பஷையில் மனித பாத்திரங்கள் மூலமாக தேவன் கொடுக்கும் இயற்கைக்கப்பாற்பட்ட வாக்குகளேயாகும். இது அறியாத பாஷையாக இருப்பதால், கேட்கிறவர்களுடைய பக்தி விருத்திகாக அது வியாக்கியானம் பண்ணப்படவேண்டியது அவசியமாகிறது.

பற்பல பாஷைகளின் வரம், தேவனிடத்திலிருந்து மனிதர்களுக்கு வரும் செய்தி என்பதை கவனிக்கவும். பற்பல பாஷைகளில் ஜெபம் என்பது, மனிதர்கள் தேவனிடத்தில் பேசுவதாகும். தேவன் ஒவ்வொரு பாஷையையும் விளங்கிக்கொள்வதால், எந்த ஒரு வியாக் கியனமும் அவருக்கு அவசியமில்லை. எனினும், தேவனிடத்திலிருந்து நமக்கு பற்பல பாஷைகளில் ஒரு செய்தி வருமென்றால், நமக்கு வியாக்கியானம் அவசியமாகிறது. ஏனெனில், பேசப்படுகிற எல்லா பாஷைகளையும் நாம் விளங்கிக்கொள்ளுகிறதில்லை. பற்பல பாஷைகளின் வரத்தை வியாக்கியானம் செய்வது அவசியம் என்று பவுல் சொன்ன போது, அவர் பற்பல பாஷைகளின் வரத்தைதான் குறிப்பிடுகிறாரேயன்றி, பற்பல பாஷைகளில் ஜெபிப்பதைக் குறிப்பிடவில்லை (1 கொரி. 14:5, 27, 28).

பற்பல பாஷைகளின் வரத்தை அப்பியாசிக்கும்பொழுது, ஒவ்வொரு மூன்று செய்திகளுக்குப் பிறகும் ஒரு வியாக்கியானம் வேண்டும் என்று பவுல் அறிவுறுத்தினார் (1 கொரி. 14:27). இந்த வசனத்தை சிலர் தவறாக புரிந்தகொண்டு, ஒரு கூட்டத்தில் பற்பல பாஷைகளில் மூன்று செய்திகளுக்கு மேல் இருக்கக் கூடாதென்று அர்த்தப்படுத்துகின்றனர். ஆனால், ஒரு கூட்டததிற்கு மூன்று செய்திகள்தான் என்று பவுல் குறிப்பிடவில்லை என்று, இந்த வேதவாக்கியத்தை கூர்ந்து கவனிக்கும்பொழுது, அது காண்பிக்கிறது. வியாக்கியானம் செய்வதின் அவசியத்தை பவுல் வலியுறுத்தகிறார். வியாக்கியானம் செய்யப்படாமல் பற்பல பாஷைகளின் பல செய்திகள் அனுமதிக்கப்படாமலிருப்பதின் அவசியத்தை பவுல் விளக்குகிறார்.

*பற்பல பாஷைகளில் ஜெபித்தல்*

பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படுத்துதலின் விளைவாக, பற்பல பாஷைகளின் வரம் இருக்கும்போது, பற்பல பாஷைகளில் ஜெபிப்பது, ஆவி மனிதனின் ஆவிக்குரிய முன்னேற்றத்தைக் குறிக்கிறது. நாம் பற்பல பாஷைகளில் ஜெபிக்கும்போது, நமது ஆவி மனிதன் தான் ஜெபிக்கிறான் (1 கொரி. 14:14). பற்பல பாஷைகளின் வரத்தையும் பற்பல பாஷையில் ஜெபிப்பதையும், அநேகர் வித்தியாசப்படுத்த முடியாதிருக்கின்றனர். அதன் விளைவாக, பற்பல பாஷைகளில் எல்லாரும் பேச வேண்டாம் என்று பவுல் சொன்னதை, பற்பல பாஷையில் ஜெபிப்பதை அவர் குறிப்பிடுவதாக அவர்கள் நினைக்கிறார்கள் (1 கொரி. 12:30), பற்பல பாஷைகளில் ஜெபிப்பதையல்ல, பற்பல பாஷைகளின் வரத்தைத்தான் பவுல் குறிப்பிட்டார். அதுதான் புதிதாக பிறந்த ஆவி மனிதனின் உரிமையும் சிலாக்கியமும் ஆகும். புதிதாய் பிறந்த ஆவி ஜெபிக்கும்போது, அது பற்பல பாஷைகளாகவே இருக்கும் (1 கொரி. 14:14).

எல்லா கொரிந்தியர்களும் ஒன்று சேர்ந்து ஜெபிப்பதைக்காட்டிலும், தான் பற்பல பாஷைகளில் அதிகமாக ஜெபிப்பதாக பவுல் சொன்னார் (1 கொரி. 14:18). எல்லா கொரிந்தியர்களையும் மிஞ்சுமளவிற்கு, எவ்வளவாய் அவர் பற்பல பாஷைகளில் ஜெபித்திருக்க வேண்டும் என்று உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? பரிசுத்த ஆவியானவருடைய வரங்களின் செயல்பாட்டிற்குள், கடந்து செல்வதற்குரிய மிகப்பெரிய திறவுகோல் இங்குதான் உள்ளது. ஆவியில் நாம் அதிகமாக ஜெபிக்கும்போது, பரிசுத்த ஆவியானவரின் வரங்களில் செயல்பட ஆவிக்குரிய நிலையில் நிரப்பப்படுகிறோம். பரிசுத்த ஆவியானவரின் வெளிப் படுத்துதல்களை வாஞ்சிக்கிற எல்லாருக்கும் ஆரம்ப இடம், பற்பல பாஷைகளில் ஜெபிப்பதுதான்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

*பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதல்*

பாஷைகளை வியாக்கியனம்பண்ணுவது என்பது, அறியாத பாஷையில் ஒரு செய்தியை வியாக்கியானம் பண்ண தேவன் கொடுக்கும் இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றலாகும். அந்நிய பாஷையை வியாக்கியானம்பண்ணும் நபர், அந்த பாஷையை விளங்கிக்கொள்வதில்லை. ஆனால், பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வரும் செய்தியாக வியாக்கியானத்தை அவர் பெற்றுக்கொள்கிறார். சில நேரங்களில் வியாக்கியானத்தின் முதல் பகுதியை மட்டும் அவர் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், மற்ற நேரங்களில் முழு செய்தியையும் அவர் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் சில நேரங்களில் வியாக்கியானம் ஒரு தரிசனத்தோட சேர்ந்து வரலாம்.

இது பற்பல பாஷைகளின் வியாக்கியானமே அன்றி, அது மொழிபெயர்ப்பு அல்ல என்பதை விளங்கிக்கொள்வது நமக்கு முக்கியமானதாகும். அவ்விதமாக, பாஷைகளின் செய்தியை வியாக்கியானம்பண்ண தேவைப்படும் நேரத்தின் அளவு, சில நேரங்களில் பாஷைகளின் செய்தியைக்காட்டிலும் நீண்டதாய் இருக்கலாம். சில நேரங்களில் கொடுக்கப் பட்ட பாஷைகளின் செய்தியினுடைய சாராம்சம் கொடுக்கப்படும்பொழுது, அது பாஷைகளின் செய்தியைக் காட்டிலும் குறுகினதாக இருக்கும். ஒரே வியாக்கியானத்தை வித்தியாசமான மக்கள் பெற்றுக்கொள்ளும்போது, சில நேரங்களில் வித்தியாசமான வார்த்தைகளை பயன்படுத்தி அது தெரிவிக்கப்படும்.

உதாரணமாக, “பயப்படாதே, நான் உன்னோடு கூட இருக்கிறேன்” என்பது, பாஷையின் வியாக்கியானமாய் இருக்கலாம். அதிகமாக படித்த இன்னொரு நபர் அதை, “அவருடைய பிரசன்னம் நம்மோடு இருப்பதால், எந்த ஒரு பயத்தின் தன்மைக்கும் இடங்கொடுக்க வேண்டாம் என்று தேவன் சொல்கிறார்” என்று வியாக்கியானப்படுத்தலாம். அதே வியாக் கியானத்தைப் பெற்றுக்கொள்ளும் வாலிபர் ஒருவர், அதை “அவர் நமக்கு அருகாமையில் இருப்பதலால் பீதி அடைய வேண்டாம்” என்ற சொல்லலாம். செய்தியின் சாராம்சம் கொடுக் கப்பட்டிருக்கிறது.

தானியேல் ‘மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின்’ என்று நான்கு வார்த்தைகளை, மூன்று நீண்ட வாக்கியங்களாக வியாக்கியானம் செய்தார் (தானி. 5:25–28). கச்சிதமான மொழிபெயர்ப்பு ‘எண்ணப்படு, எண்ணப்படு, எடைபோடு, பிரித்துவிடு’ என்றிருக்கும். பாஷை களின் வியாக்கியானம், தேவ செய்தியின் நடைமுறை செயல்பாட்டைக் கொண்டு வரும்.

*தனிப்பட்ட வியாக்கியானம்*

அந்நிய பாஷைகளை வியாக்கியானம் செய்யும் ஆற்றலுக்காக நாம் ஜெபிக்க முடியும் (1 கொரி. 4 13). பற்பல பாஷைகளில் நாம் ஜெபிக்கும் எல்லாவற்றையும், நாம் விளங்கிக் கொள்ள வேண்டும் என்று தேவன் நம்மிடத்தில் எதிர்பார்ப்பதில்லை. ஆனால், ஆவியான வரின் காரியங்களில் நாம் வளர்ந்து முன்னேரும்பொழுது, நாம் எதைப் பற்றி ஜெபிக்கிறோமோ அவைகளின் சாராம்சத்தை விளங்கிக்கொள்ள முடியும். இந்த ஆவிக்குரிய தெளிந்த உணர்வை போஷித்து வளர்த்துக்கொள்ள முடியும். உள்ளே உள்ள அபிஷேகத்தின் வெளியே நடைபெறும் வேலைதான் இது. ஆனால், பற்பல பாஷைகளின் வியாக்கியானம் என்பது, மேலுள்ள அபிஷேகத்தின் வெளியே நடைபெறும் வேலையாகும்.

நமது தனிப்பட்ட வாழ்வில், ஆவியில் பாடவும் கற்றுக்கொண்டு, வியாக்கியானத்தையும் பாட முடியும். ஒருவர் பக்திவிருத்தியடைய, இது மிகவும் வல்லமையுள்ள வழியாகும். சில நேரங்களில் பரிசுத்த ஆவியானவருக்கு நம்மை விட்டுக்கொடுக்கும்போது, நமக்கு நாமே பற்பல பாஷைகளில் பேசி, நமக்கு செய்தியாக அதை வியாக்கியானப்படுத்திக்கொள்ளலாம். அப்படிப்பட்ட நேரங்கள் எப்பொழுதுமே மிகவும் பக்திவிருத்தி உண்டாக்க கூடியதாகும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

## *அத்தியாயம் 5*

# வரங்களில் தடையின்றி செயல்படுவது எப்படி

பரிசுத்த ஆவியானவருடைய வரங்களின் எல்லா செயல்பாட்டிற்கும் பொருத்தமான அடிப்படை கொள்கைகள் சில உள்ளன. இந்த எல்லா அடிப்படை கொள்கைகளும், ஒரு நபர் ஆண்டவருக்கு தன்னை அர்ப்பணித்திருப்பதை சார்ந்துதான், அவரின் வாழ்வில் வித்தியாசப்பட்ட நிலைகளில் அவைகள் வளர்ச்சியடைய முடியும்.

### *விசுவாசக் கொள்கை*

பரிசுத்த ஆவியானவரின் எல்லா வரங்களும், ஒரு நபர் மூலமாக விசுவாசத்திலே செயல் படுகின்றன. உண்மையிலேயே, அங்கு வெளிப்படுத்தியிருக்கிற மேலுள்ள அபிஷேகம், வெளிப்படுத்தியிருத்தலோடு சேர்ந்திருக்கிறது. எனினும், எவ்வளவுக்கதிகமான ஆவிக்குரிய உணர்வுகளை நாம் பெற்றாலும், அவைகளை செயல்படுத்த தேவையானதெல்லாம் தைரியம் மட்டும்தான். தேவனுடைய வரங்கள் மனிதனுடைய சுய தெரிந்தெடுப்பை மீறுவதில்லை.

பரிசுத்த ஆவியானவரின் எந்த வரத்தையும் செயல்படுத்துவதில், நாம் நமது விசுவாசத்தை அப்பியாசிக்க வேண்டும். பற்பல பாஷைகளில் ஜெபிக்கும் ஆற்றலைப்போலத்தான் இதுவும் உள்ளது. பற்பல பாஷைகளில் பேசுகிற ஒவ்வொருவரும், தாங்கள் பேசுகிற பாஷைகளின் உண்மைத் தன்மையை, தங்கள் கிறிஸ்தவ வாழ்வின் ஏதாவது ஒரு கட்டத்தில் கேள்வி கேட்டிருக்கிறார்கள். பற்பல பாஷைகளில் பேசும் ஒவ்வொருவரும், பற்பல பாஷையில் பேசும் போது, ஒவ்வொரு முறையும் விசுவாசத்தை அப்பியாசிக்க வேண்டும்; தன் மூலமாக பரிசுத்த ஆவியானவர்தான் பேசுகிறார் என்று விசுவாசிக்க வேண்டும்.

ஒரு கிறிஸ்தவர் தேவ வார்த்தையில் தன்னை நிலைப்படுத்திக்கொண்டு, ஆவியானவரின் காரியத்தில் அதிக அனுபவம் பெற்றுக்கொள்வதினால், அடுத்த முறை பரிசுத்த ஆவியான வரின் வரங்களில் செயல்படும்போது, அதிக தைரியத்தையும் அதிக தன் நம்பிக்கையையும் அவர் பெருக்கிக்கொள்வார்.

### *அபிஷேகத்தின் கொள்கை*

பரிசுத்த ஆவியானவரின் எல்லா வரங்களும், மேலுள்ள அபிஷேகத்தோடு சேர்ந்து வருகின்றன. மேலுள்ள அபிஷேகத்தையும், உள்ளேயுள்ள அபிஷேகத்தையும் வித்தியாசப் படுத்த நாம் கற்றுக்கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியானவரின் வரங்கள், ஒரு வலிமை யான அபிஷேகத்தால் வெளிப்படுத்தப்படுகின்றன. மனுக்குலம், சிந்தையில் இந்தக் கோடிக்கோ அல்லது அந்தக்கோடிக்கோ சாயும் தன்மை உடையது. இது தேவனிடத்தில் இருந்து வந்தது அல்ல என்ற பயத்தினால், தைரியமாக கீழ்ப்படியாதவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் அதிக தைரியத்திற்காக ஜெபிக்க வேண்டும். மற்றுமொரு புறத்தில் சில வரங்களை செயல்படுத்துவதில், 'கிரமமானவர்களாக' மற்றவர்கள் இருக்கிறார் கள். பரிசுத்த ஆவியானவரின் வரம் என்று அழைக்கப்படுவதில் அவர்கள் செயல்படும் முன்பு, இந்த 'கிரமமானவர்கள்' தங்கள்மேல் ஒரு அபிஷேகம் (மேலுள்ள அபிஷேகம்) இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். அப்படி இல்லாவிட்டால், பரிசுத்த ஆவியான வரின் சத்தத்தையல்ல, அவர்கள் கேட்பது வெறும் மனித ஆவியின் சத்தமாகத்தான் இருக்கும்.

'நேர்மையான தவறுகளை' மக்கள் நடப்பிக்க, ஒரு ஆராதனையில் நாம் இடமளிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்ப்படியவும், அவரது வரங்கள் வெளிப்படுத்தப் படவும், உண்மையாக நாடும்படி அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். எனினும், ஒரு கிறிஸ்தவர் ஆண்டவரில் முதிர்ச்சி அடைந்து, பரிசுத்த ஆவியானவரின் காரியங்களில் அனுபவம் வாய்ந்தவராக மாறும்போது, தேவன் தங்களோடு பேசுவதை மட்டும் பெற்றுக்கொள்ள – வெறும் புத்திசொல்வதை மட்டுமல்ல – காத்திருக்கும் மற்ற எல்லா

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

திருச்சபையாருடைய நேரத்தை வீணாக்காமலிருக்க அறிந்திருக்கும்படி, ஒரு கிறிஸ்தவரை நாம் எதிர்பார்க்கிறோம். பழைய வருட பானையிலுள்ள 'பழைய சோறு' அல்ல, எங்களக்கு 'ஆண்டவரிடத்திலிருந்து புதிய வார்த்தை' வேண்டும்.

*வாஞ்சை மற்றும் எதிர்பார்ப்பின் கொள்கை*

சிறப்பான வரங்களை வாஞ்சையோடு விரும்ப வேண்டும் என்று பவுல் சொன்னார் (1 கொரி. 12:31). எங்கெல்லாம் அவர் வரவேற்கப்படுகிறாரோ, அங்குமட்டும்தான் பரிசுத்த ஆவியானவர் வேலைசெய்வார். வருந்தத்தக்க விதமாய், அநேக இடங்களில் தன்னை வெளிப்படுத்துவதற்கு பரிசுத்த ஆவியானவர் வரவேற்கப்படுவதில்லை. ஒவ்வொன்றுமே, மாற்றமில்லாமல் ஒன்றுபோலவே நடைபெறும் மனிதனுடைய நிகழ்ச்சிகளால் அழுத்தப் படுகின்றன. பரிசுத்த ஆவியானவரின் விடுதலை இல்லை.

வரங்களை பரிசுத்த ஆவியானவர் தன் இஷ்டம்போல் வெளிப்படுத்த, அவர் தன்னை வெளிப்படுத்துவதற்கான கூட்டங்கள், நேர அழுத்தத்தின் கீழ் இல்லாமல் நேரக் கட்டுப் பாடற்றதாயிருக்க வேண்டும். அவர் விரும்புகிறபடி வெளிப்படுத்தப்பட, பரிசுத்த ஆவியானவர் தனது விருப்பம்போல நேரமெடுக்கிறார். நமது கூட்டங்களில் அவர் வெளிப்படுத்தப்பட, தேவன்மேல் ஒரு பயங்கரமான பசிதாகமும், உண்மையான எதிர்பார்ப்பும் நமக்கு இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கூட்டங்களுக்கு வரும் மக்கள், தேவன் பேச அவரை அனுமதித்து தேவனுக்காக காத்திருக்க விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். காத்திருத்தல் அதிக துதியோடும் ஆராதனையோடும் சேர்ந்து வரவேண்டும்.

*வெளிப்படுத்துதல் எல்லாருக்கும்தான்*

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்ற புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளதைப் போலவே, மேலுள்ள அபிஷேகத்தின் வெளிப்படுத்துதல்களைப் பற்றிய கொள்கைகளெல்லாம், பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தப்பட, நாம் விரும்பும் எல்லாக் கூட்டங்களிலும் அப்பியாசிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வருக்கும் கொடுக்கப்படும் பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படுத்துதல்க ளெல்லாம், எல்லாருடைய பிரயோஜனத்திற்காகவோ கொடுக்கப்படுகின்றன (1 கொரி. 12:7). கிறிஸ்துவின் முழு சரீரமும் பக்திவிருத்தியடைய அவர்கள் கொடுக்கத்தக்கதாக, பரிசுத்த ஆவியான வரிடமிருந்து ஒவ்வொரு நபரும் நிச்சயமாகவே சில காரியங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் என்னவென்று நாம் விளங்கிக் கொள்வதினால், பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படுத்துதல்களை பெற்றுக்கொள்ள, நாம் நன்கு ஆயத்தமானவர்களாகிறோம். ஒவ்வொரு வகையான வரமும் வெளிப்படுத்தப்பட ஏற்ற நேரமும் இடமும் உண்டு. வெளிப்பாட்டு வரங்களின் அபிஷேகமும், வல்லமை வரங்களின் அபிஷேகமும், வாக்கு வரங்களின் அபிஷேகமும் வித்தியாசமாக செயல்படுகின்றன. சரியான நேரத்தில் சரியான வரம் செயல்படுவதை பகுத்தறிய, வெளிப்படுத்துதலில் எந்த வகை அபிஷேகம் இருக்கிறது என்பதற்கு நாம் உணர்வுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*